பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (26-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:152



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் வன்னியிலிருந்து மாலைதீவு வழியாக லண்டன் பயணமானார். இரணைமடுக்குள நீர்ப்பரப்பில் வந்திறங்கிய கடல் விமானத்தில் ஏறுவதற்காக பாலசிங்கம் தம்பதியரை புலிகள் பிரமுகர்கள் படகில் ஏற்றிச் செல்வதை முதற்படத்திலும் - போராளிகளின் உதவியோடு பாலசிங்கம் கடல் விமானத்தில் ஏறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

### நேற்று யாழ். திரும்பிய

## புலிப்பிரமுகர்கள் 'வோக்கிடோக்கி' எடுத்துவர படையினர் தடைவிதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

அரசியல் கலந்தாலோசனைகளுக்காக வன்னி சென்றிருந்த விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்கள்.

முகமாலைச் சோதனைச்சாவடியில் தொலைத் தொடர்பு சாதனங்களுடன் யாழ்ப்பாணம் வர அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் -

அதனால் தொலைத் தொடர்பு சாதனங்களை வழிஅனுப்ப வந்தவர்களிடம் கொடுத்துவிட்டு அவர்கள் இங்கு வந்துள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

இதற்கிடையில் குடாநாட்டில் தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தீவகம் முழுவதும் ராணுவப் பிரதேசம் எனவே புலிகளை அனுமதிக்க முடியாது

## வடக்குக் கடற்படைத் தளபதி அறிவிப்பு கண்காணிப்பு குழுவுக்கு விளக்கக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்26

**குடாநாட்டின் தீவகம் எங்கும் கடற்படை முகாம்கள் உள்ளன. எனவே அது இராணுவப் பிரதேசம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு தரப்பு தனது இராணுவப் பிரதேசத்துக்குள் மற்றைய தரப்பை அனுமதிக்காமல் தடை செய்யமுடியும்.**

**இதன் அடிப்படையில் இராணுவப் பிரதேசமான தீவகத்திற்குள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வருவதற்குப் புலிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

**இலங்கைக் கடற்படையின் வட பிராந்தியக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ்.பி. வீரசேன கண்காணிப்புக் குழுவிற்கு இவ்வாறு அறிவித்திருக்கின்றார்.**

கடந்த 12ஆம் திகதி மண்டைதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்குச் செல்ல முயன்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அங்கு கடமையில் இருந்த கடற்படையினரால் தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இது விடயம் தொடர்பாக கடந்த 16ஆம் திகதி காங்கேசன்துறை கடற்படை முகாமில நடைபெற்ற கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைக் கடற்படையின் வடபிராந்திய தளபதி தமது நிலைப்பாட்டை கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தங்கடை துணைப்படைக் காரரின்ரை சரணாலயம் தொடர்ந்து இருப்பதை உறுதிப்படுத்துறதுக்குத்தான் உந்த வியாக்கியானம் பாருங்கோ...

## முகமாலை ஊடாக இன்றும் நாளையும் போக்குவரத்துக்குப் படையினர் அனுமதி

### விடுமுறை தினங்களிலும் இனி பயணம் செய்யலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

விடுமுறை தினங்களாக இருந்த போதிலும் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் பயணிகளின் போக்குவரத்துக்காக முகமாலை சோதனைச் சாவடி திறக்கப்படும்.

இது குறித்து யாழ். மேலதிக அரச அதிபர் துரைத்திலிங்கத்துக்குப் படை அதிகாரிகள் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

ஏ-9 கண்டி வீதி ஊடான போக்குவரத்து மற்றும் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று பலாலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண அரிசி விலை திடீரென அதிகரிப்பு!

### விநியோகிக்கும் அளவு குறைக்கப்படலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியின் விலை திடீரென கிலோ ஒன்பது ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் முதல் இந்தப் புதிய விலைப் பெறுமதிக்கே நிவாரண அரிசி பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் -

விலை அதிகரிக்கப்பட்டிருப்பதால் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படும் அரிசியின் மொத்த நிறை அதன் பணப் பெறுமதி அதிகரித்துள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களப் பாடல்களுக்கு வவுனியாவில் தடையா?

### மறுக்கின்றனர் விடுதலைப் புலிகள்

வவுனியா,ஏப்.26

வவுனியாவில் சிங்களப் பெயர்களைப் பயன்படுத்தவோ அல்லது சிங்களப் பாடல்களை ஒலிபரப்பவோ தாங்கள் தடை விதிக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சிங்களப் பெயர்களையும் சிங்களப் பாடல்களையும் வவுனியாவில் விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து கரிகாலன் மட்டக்களப்பு திரும்பினார்

மட்டக்களப்பு,ஏப்.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் வன்னியிலிருந்து மட்டக்களப்புக்குத் திரும்பியுள்ளார்.

புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமாகப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடுவதற்காக அண்மையில் அவர் வன்னி சென்றிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்சங்கங்கள் இணைந்து குடாநாட்டில் கூட்டு மேதினம்!

யாழ்ப்பாணம்,ஏப்.26

தொழிலாளர் தினமான மேதினத்தை இம்முறை வட பிரதேசத்தில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து ஒரு மாபெரும் நிகழ்வாக கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் மேதினக் கொண்டாட்டம் தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டத்தில் இந்த மேதினம் வருவதால் இந்த நிகழ்வின் மூலம் பல விடயங்களை வலியுறுத்த வேண்டும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அவை வருமாறு:-

★ தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்துதல்.

★ நாட்டில் நிரந்தர சமாதானம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. கடற்படைக் கப்பல் வருகிறது

அமெரிக்கக் கடற்படைக் கப்பலான 'யு.எஸ்.எஸ். ஹொப்பர்' எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்புக்கு வருகைதரும் என்று அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது.

எட்டு ஆண்டுகளுக்கும் கூடுதலான காலத்தில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருவது இதுவே முதற்தடவையாகும். எரிபொருள் நிரப்புவதற்காக அக்கப்பல் துறைமுகத்தில் 10 மணி நேரம் தரித்து நிற்கும்.

கொழும்பில் இருந்து புறப்பட்டுச் செல்லும் இக்கப்பல் மேற்கு இந்து சமுத்திரத்தில் அமெரிக்க மத்திய கட்டளைக் கப்பல் அணியுடன் சேர்ந்து ரோந்துப் பணியில் ஈடுபடும். (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பிரபாவை சந்தித்த விவகாரம்:

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள எப்போதும் தயார்!

## ஆறுமுகம், சந்திரசேகரன், ஹக்கீம் சவால்

கொழும்பு,ஏப்.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தமைக்காக இனவாத சக்திகள் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால் அதனை எதிர்கொள்ளத் தாம் தயாராக உள்ளதாக அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகள் அன்றுமுதல் இன்றுவரை சமாதான முயற்சிகளைக் குழப்பியே வந்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர்கள் ஆறுமுகம் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் மேலும் கூறுகையில் -

எமக்கு எதிராக இனவாத சக்திகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதன் நோக்கம் சமாதான முயற்சிகளைக் குழப்பும் எண்ணத்திலேயே ஆகும். தற்போது நாட்டில் சமாதானம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது. இந்நிலையில் எதிர்க்கட்சிகள் சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற செயற்பாட்டில் ஈடுபடாது பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும்.

இதனை மீறி எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால் அதனை எதிர்கொள்ளத் தாம் தயார் இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவரைச சந்தித்ததன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எவ்வித பங்கமும் ஏற்படவில்லை. இச்சந்திப்பைத் தவறாகப் புரிந்துகொண்டு அணுகுவதற்கு எதிர்க்கட்சிகள் முயன்று வருகின்றன. இது தவறான நடைமுறையாகும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு எதிராக ஜே.வி.பி. நாடாளுமன்றில் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'அமைச்சர்கள் மூவரும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுநடத்தவே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் சென்றார்கள். சிறுபான்மையினரான அவர்களுக்கு அரசாங்கம் தீர்வு வழங்காததாலேயே அவர்கள் அங்கு சென்றார்கள். இதனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்றால் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு எதிராகவே கொண்டுவரவேண்டும்' - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-8)


### தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை

## திறப்பு விழா ஒத்திவைப்பு

இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பிரதேசத்திற்கான அரசியல்துறைப் பணிமனைத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திறப்பு விழா நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை வேம்படியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/21925) - வடமராட்சி வடக்கு சமாசம்.



### அகவை அறுபதைக் காணும் இசையாசிரியரை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் கடந்த 13 வருடங்கள் இசையாசிரியராகக் கடமையாற்றி இன்று (26.04.2002) ஓய்வுபெறும்.

### திருமதி நீலாயதாட்சினி செல்வராசா

*(இசைமாணி அண்ணாமலை பல்கலைக்கழகம்)*

அவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய நற்பணிகளைப் பாராட்டுவதோடு, அவர் சமுதாயத்திற்கு மேன்மேலும் சேவைகள் பல புரிந்து மனநிறைவுடன் வாழ எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை. (C/21921) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கேதீஸ்வரி சிவராசா அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் கார்த்திகேசு முருகப்பா

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்
யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை

(3199)



## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ஐங்கரனின் அன்புத் தந்தையாராகிய

### துரையப்பா பூபாலசுந்தரம்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணனி விஞ்ஞானத்துறை நண்பர்கள்.

(3197)



## கண்ணீர் அஞ்சலி

*இரசாயனவியற்றுறை உதவி விரிவுரையாளர்*

திரு.பூ. ஐங்கரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### துரையப்பா பூபாலசுந்தரம்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரசாயனவியற்றுறை விஞ்ஞானபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

(3198)


## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.26

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பொற்பதி விளையாட்டுக்கழகத்தினால் அமரர் டாக்டர் எஸ். சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் பொற்பதி விளையாட்டுக் கழகம்.

★ புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் (ஐ-86)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலாளர் பிரிவு அணிகளுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (ஐ-86)

## ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்,ஏப்.26

மௌனகுரு கடவுள் சுவாமிகளின 97ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சுவாமி சந்நிதியில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். (ஐ-173)

## குற்றவியல் அவதூறு சட்டம் விரைவில் நீக்கம்!

சட்டக் கோவையில் இருந்து குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் நீக்கப்படவுள்ளன என்று நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டக கோவையின் 479ஆவது பிரிவில் இருந்து 482ஆவது பிரிவுவரையான அம்சங்களே நீக்கப்படவுள்ளதாகவும் -

இதற்கான திருத்தங்கள் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் -அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# செட்டிகுளத்தில் பணிமனை திறக்க விடுதலைப் புலிகள் தீர்மானம்

வவுனியா,ஏப்.26

வவுனியா மாவட்டத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை விரிவுபடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் செட்டிகுளம் பிரதேசத்தில் கிளைப் பணிமனை ஒன்றைத் திறக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேளவன் இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையே, விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் பணிமனைக்கு பணமோசடி, காணி, குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அதிகளவில் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

ஆனால் வவுனியா பிரதேசம் அரசாங்கத்தினதும், இலங்கைப் பொலீஸாரினதும் நிர்வாகத்தில் இருப்பதால் விடுதலைப் புலிகள் அந்த முறைப்பாடுகள் குறித்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவருகிறது. ஆயினும் முறைப்பாடுகளின் அடிப்படையில் இரு சாராரையும் அழைத்து பிரச்சினைகளுக்குச் சுமுகத்தீர்வை விடுதலைப் புலிகள் கண்டுவருவதாக புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (஘)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் உதயகுமார்

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும்கொண்ட சுப்பிரமணியம் உதயகுமார் (உதயன்) நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மேற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.* (3203)

தகவல்:
க.சுப்பிரமணியம்
(தகப்பன்)

### சவரிமுத்து அருளானந்தம் (அருள்)

*(இளவாலை)*

இளவாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட சவரிமுத்து அருளானந்தம் 24.04.2002 புதன் கிழமை காலமானார்.

அன்னார் குணத்தின் அன்புக் கணவரும் திரேசாதிலகவதி (கலா - சுவிஸ்), ஜோ வலன்ரைன் (U.K.), திரேசா வலன்ரீனா (U.K.), அகஸ்ரா (சுவிஸ்), அகஸ்ரீன் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் துரைநாயகம் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜோ றொமின் மற்றும் ஜோ சுஜி (U.K.), சமரக்கோன் (U.K.), புவிராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பீற்றர் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (மாம்பழம்) மற்றும் லோறன்ஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நெவில், எமில், ஆர்த்திகா (சுவிஸ்), லின்டா, நோபேட் (U.K.), தாமிரா, சாமிரா (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக சனிக்கிழமை (27.04.2002) பிற்பகல் 2.30 மணிக்கு (பு.நே.) புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி நடைபெற்று, பின்னர் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் வழிபாடு நடத்தப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித அன்னாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36/1,புனித ஆசீர்வாதப்பர் வீதி,*
*கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.No.3649* (3200)

தகவல்:
M.யேசுதாசன்
(சம்பந்தி)

### திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

உசன், மிருசுவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் செட்டியார்மடம் அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் நேற்று (25-04-2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வைரவிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் ஓய்வுபெற்ற ஆசிரியர் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கலானந்தன் (பிரான்ஸ்), சதானந்தன் (லண்டன்), சுமதி (ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), கோமதி (ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியலாயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் சௌந்தரராஜா (உதவித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்), சிவனொளிச்செல்வன் (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), அமலேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆரூரன், சிவாகை, ஜனனி, அரன், கவின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2002) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியார் மடம்,*
*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.* (3206)

தகவல்:
ச.பாலசுப்பிரமணியம்
(கணவர்)

### திருமதி தங்கராசா இந்திராதேவி

ஈவினையைப் பிறப்பிடமாகக்கொண்ட, திருமதி தங்கராசா இந்திராதேவி நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கராசாவின் (ஆசிரியர், நவக்கிரி அ.மி.த.பாடசாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பாக்கியதேவியின் (ஆஸ்திரேலியா) சகோதரியும் நாறுசா, நிசாகர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தாயும் வாசவனின் (ஆஸ்திரேலியா) மாமியாரும் அச்சனின் (ஆஸ்திரேலியா) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஈவினை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்* (3205)

தகவல்:
நா.தங்கராசா
(கணவர்)

உதயன்

# ஜனாதிபதி மனமாற்றமா அல்லது தடுமாற்றமா?

நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முந்திய இறுக்கமான நிலையில் இருந்து இப்போது இறங்கிவிட்டார் என்பது தெரிகிறது.

எல்லா சமூகங்களுக்கும் சமநீதி வழங்கி, அரசியல் அதிகாரங்களைப் பரவலாக்கி, முறுகல் நிலையைத் தவிர்த்து, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு புலிகளுடன் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டுள்ளது. அதன் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

என்றாலும் நாட்டுக்கு சமாதானம் வேண்டும் என்பதை ஒப்புக்கொண்ட ஜனாதிபதி, புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆரம்பத்தில் எதிர்த்தார். அதில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் நாட்டுக்கும் நாட்டு மக்களின் நலனுக்கும் தீங்கிழைக்கும் என்று அவர் எச்சரிக்கையும் விடுத்தார்.

த்ற்போது ஜனாதிபதி இந்தியாவில் இருக்கின்றார். அங்கே புதுடில்லியில் முன்னாள் அமைச்சர் மாதவராவ் சிந்தியா நினைவுப் பேருரையை அவர் நிகழ்த்தினார்.

அந்த உரையிலேயே அவர் சொன்ன மணியான கருத்து இது:-

"அநீதி இழைக்கப்படும்போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பது இப்பொழுது உணரப்படுகிறது. ஒரே நாட்டில் அந்த நாட்டின் மக்களாக வாழும் பல்வேறு குழுவினர் பிரிந்து நின்று மோதிக்கொள்வதற்கான மூல காரணத்தைக் கண்டறியவேண்டிய அவசிய தேவை இன்று ஏற்பட்டிருக்கின்றது"

ஜனாதிபதி இப்படிக் கூறியதோடு நின்றுவிடவில்லை. இந்தியாவின் முன்னாள் பிரதமரும் தனது நண்பருமான ஐ.கே.குஜ்ராலைச் சந்தித்துப் பேசியபோது தன்னுடைய இன்றைய நிலையை அவருக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதைக் குஜரால் வெளியிட்டிருக்கிறார்.

சமாதான முயற்சிகளைத் தாம் உறுதியாக ஆதரிப்பதை ஜனாதிபதி வற்புறுத்திக் கூறுகிறார். சமாதான முயற்சிகள் சம்பந்தப்பட்டமட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தனக்கும் இடையே முற்று முழுதான சிந்தனை, ஒற்றுமை இருப்பதாகவும் ஜனாதிபதி கூறுகிறார். இப்படி குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்

ஜனாதிபதியின் இன்றைய இந்த நிலை அவருடைய முந்திய நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஜனாதிபதி உண்மையில் மனம்மாறி விட்டாரா அல்லது தடுமாற்றத்தில் இருக்கிறாரா? ஜனாதிபதி என்ற வகையில் சந்திரிக்கா குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுத்துவாரேயானால் நாடாளுமன்றம் அவருக்கு பணம் ஒதுக்காமல் அவருடைய அரசியல் செயற்பாடுகளை முடக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. இப்படி அரசுத் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்போது, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பது உட்பட ஜனாதிபதியின் பல அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தேசிய நலன் குறித்த காரணங்களுக்காக எம்.பிக்கள் பதவியை இழக்காமல் கட்சிமாறுவதற்கு வகை செய்யப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவற்றால் ஜனாதிபதி தடுமாறிப்போய், படியிறங்கியிருக்கிறாரா அல்லது உண்மையில் மனம்மாறி விட்டாரா? அவருடைய வருங்கால அரசியல் நடவடிக்கைகள்தாம் அதைத் தெளிவுபடுத்தும்.

## யாழ்.சைவபரிபாலன சபையின்
# சித்தாந்த பண்டிதர் பரீட்சை அடுத்தமாதம் 3இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்.சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் சித்தாந்த பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் பட்டப்பரீட்சைகள் எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதிவரை வண்ணை. நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இலக்கணம், இலக்கியம், சாத்திரம், திருமுறை, உரைநடை ஆகிய ஐந்து வினாப்பத்திரங்களைக் கொண்ட மேற்படி பட்டப் பரீட்சையில், சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சைக்கு 17 பேரும், சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சைக்கு 15 பேரும், சித்தாந்த பண்டிதர் பரீட்சைக்கு 16பேரும் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள், நேர அட்டவணை என்பன தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

# யாழ்நகரில் இன்று தந்தை செல்வா நினைவு நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

தந்தை செல்வாவின் 25ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் இன்று யாழ்நகரில் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு சுண்டுக்குளி பரியோவான் தேவாலயத்தில் நன்றி ஆராதனை இடம்பெறும்.

தொடர்ந்து காலை 9மணிக்கு யாழ்நகரில் உள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்தில் மலரஞ்சலியும், நினைவுரைகளும் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நினைவுப் பேருரை இடம்பெறும். கல்வியியற்றுறைப் பேராசிரியர் சபா.ஜெயராசா "இலங்கையில் ஆசிரியவாண்மை" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து இராமநாதன் நுண்கலைப் பீட மாணவிகள் வழங்கும் இசைமாலை, நாட்டியாஞ்சலி என்பன இடம்பெறும்.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (எ)

# மூவின கலைஞர்கள் பங்குபற்றும் கலைப்பாலம் இறுதி நிகழ்வு
## நாளை திருமறைக் கலாமன்றத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.26

நாட்டில் உள்ள அனைத்து திருமறைக் கலாமன்றங்களின் கிளைகளும் இணைந்து நடத்தும் 'கலைப் பாலம் - 2002"இன் இறுதி நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

மூவின கலைஞர்களையும் ஒன்றிணைத்து நடத்தப்பட்டு வரும் இந்த கலை நிகழ்வுக்கு "நாம் ஒரே குடும்பம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கலை நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக "தர்சனா" என்ற வார்த்தை களற்ற நாடகமும் மேடையேற்றப்படவுள்ளது. இதில் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் கலந்து சிறப்பிப்பர்.

இந்தக் கலை நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக சிங்கள மற்றும் முஸ்லிம் கலைஞர்களும் இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இதேவேளை -

இந்த "கலைப்பாலம் - 2002" நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மாத்தளை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமும் திருமறைக் கலாமன்றம் கலைப்பால நிகழ்வுகளை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (க-6)

# சைவசமயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.26

சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர். வாழ்த்துரையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்குவார்.

'ஆலய நிர்மாணம்' என்ற தலைப்பில் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயரும் 'சைவாலய பூசையில் சிவாச்சாரியார் என்ற தலைப்பில் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்களும் 'ஆன்மார்த்த பரார்த்த பூசை நெறி' என்ற தலைப்பில் சிவஸ்ரீ ச.மகாலிங்கக் குருக்களும், 'மகாகும்பாபிஷேகம்' என்ற தலைப்பில் சிவஸ்ரீ சு.து.சுந்தர மூர்த்திக் குருக்களும், 'மகோற்சவ கிரியைகள்' என்ற தலைப்பில் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்களும், 'சைவ ஆலய பரிபாலனம்' என்ற தலைப்பில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் கருத்துரை வழங்குவர். (க-எ)

### நாளை

சித்திரை 14
சனிக்கிழமை
(27.04.2002)
திதி : பூரணை
முற்பகல் 9.24 வரை.
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு 9.31 வரை.
சுபநேரம் : 2.59 - 4.29
ராகுகாலம்: 8.59 - 10.29
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சொல்லால், பார்வையால் அல்லது சைகையால பிறரை ஏமாற்றிவிடாதே.



புதுடில்லி சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வரவேற்று அழைத்துச் செல்கிறார். (க)

## குடாநாட்டில் போரின் காரணமாக
# உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச ஆலோசனை வழங்க ஏற்பாடு
## குடும்ப புனர்வாழ்வு நிலைய அதிகாரி இங்கு வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்.குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளரீதியான தாக்கங்கள் மற்றும் அவர்களுக்கான பிரச்சினைகள் தொடர்பான விவரங்களைச் சேகரிப்பதற்காக குடும்ப புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

போரின் காரணமாக ஏற்பட்ட உளத்தாக்கங்கள், உடல் தாக்கங்கள் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களைச் சேகரிப்பதன்மூலம் அவர்களுக்கு உளவள ஆலோசனை, சட்ட ஆலோசனை மற்றும் வைத்திய உதவி என்பவற்றை இந்த நிலையம் இலவசமாக வழங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சித்திரவதைக்குள்ளானவர்கள், விதவைகள், உடல் ஊனமுற்றோர், குண்டு வெடிப்பின் காரணமாக உடல், உள பாதிப்புக்குள்ளானோர், இடம் பெயர்ந்தோர் ஆகியோருக்கு ஏற்பட்டுள்ள உளத்தாக்கங்களைக் கண்டறிவதே இந்த நிலையத்தின் நோக்கம் என்று இங்கு வருகை தந்துள்ள மேற்படி நிலையத்தின் திட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.பூவேந்திரன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள சட்ட நிபுணர்கள், டாக்டர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உளவளத் துணை நிபுணர்கள் போன்றவர்களைச் சந்தித்து இவர் விவரங்களைத் திரட்டி வருகிறார்.

யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற இவர் அங்குள்ள அதிகாரிகளுடனும் கலந்துயைாடியுள்ளார். மே மாத இறுதியில் தமது அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-10)

# 50 சட்டத்தரணிகள் இன்று வருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.26

கடந்த 12 வருடங்களின் பின்னர் தென்பகுதியைச் சேர்ந்த 50 சட்டத்தரணிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று இரவு 7 மணிக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் இவர்களை வரவேற்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

பிரதம நீதியரசரால் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு தொகை சட்ட நூல்களையும் இவர்கள் எடுத்து வந்து யாழ்ப்பாண சட்டத்தரணிகளிடம் கையளிக்கவுள்ளனர்.

தொடர்ந்து கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட நீதிவான்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# விலைகளைக் கூட்டி விற்ற வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொருள்களின் விலைகளைக் கூட்டிவிற்ற மற்றும் நிறை குறைந்த பாணை உற்பத்தி செய்த 4 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் திடீர் சோதனைகளின் போது கண்டறியப்பட்ட இந்தக் குற்றச் செயல்களுக்காக அவர்கள் நீதிமன்றங்களில் வழங்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதன்பிரகாரம் வண்ணார்பண்ணைப் பகுதியில் ஒரு லீற்றர் மண்எண்ணெய்யை 60 ரூபா வீதம் விற்பனை செய்த வர்த்தகருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

தீவகம் உட்பட மூன்று இடங்களில் நிறைகுறைந்த பாணை விற்பனை செய்தவர்களுக்கு தலா ஆயிரம்ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டது. (க-6)

# முழுநிலா நாள் கலைவிழா

கோப்பாய்,ஏப்.26

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு நடத்தும் முழுநிலா நாள் கலை விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி கலையரங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பனைவளம் பற்றிய 'தாளலயம்' வில்லிசை ஆகியனவும் பெண் எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் கௌரவிப்பும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவகி ருக்மணி ஆனந்தவேல் கலந்துகொள்வார். (க-72)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் 2ஆம் பாதம், உதயத்தில் செவ்வாய்க்குற்றமுள்ள, லண்டனில் சொந்தமாக சுப்பமார்க்கட் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த, அழகிய, நற்பண்புள்ள மணமகளை சீதனத்துடன் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: வி.தனபாலசிங்கம், 22, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி. (3130)

61ஆம் ஆண்டு கேட்டை நட்சத்திரம், பாவம் குறைந்த, சுவிஸ் பிரஜாவுரிமை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன், 770, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3183)

### ஒத்துமாறல்

வவுனியா மாவட்டத்தில் இருந்து யாழ்மாவட்டத்திற்கு பட்டதாரி ஆசிரியர் ஒருவர் இடமாற்றலாகி வர விரும்புகிறார். யாழ். மாவட்டத்திலிருந்து வவுனியா மாவட்டத்திற்கு ஒத்துமாற (Mutal Transfer) விரும்புவோர் தொடர்பு கொள்க. விளம்பர இல.1502, மே.பா - உதயன்.

(3175)

## இரண்டு பிடி கீரை 5 ரூபாவுக்கு விற்பனை

சுழிபுரம் ஏப்.26

சுழிபுரம் சத்தியகாட்டுச் சந்தையில இரண்டு பிடி கீரை 5 ரூபாவுக்கு கடந்த ஒரு வாரமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சுழிபுரம் பறாளைப் பகுதியில் உள்ள தோட்டக் காணிகளில் கீரைச செய்கை அமோக விளைச்சலை கொடுத்துள்ளது.

பறாளைக் கீரைக்கு அதிக கிராக்கி இருந்தும் உற்பத்தி அதிகமாக இருப்பதால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தோட்டச் செய்கையாளருக்கு விலை வீழ்ச்சி ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. (க-28)

### காணவில்லை

MD 90 இல. 500 - 5905 (Chassis No:2007214, Engine No:2007217) மோட்டார் சைக்கிள் 22.04.2002 அன்று சுன்னாகம் கதிரமலை சிவன்கோயிலில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின்போது காணவில்லை. இதைப் பற்றித் தகவல் அறிந்தவர்கள் இ.சோமசுந்தரேஸ்வரக்குருக்கள், *கும்பிழாவளைப பிள்ளையார் கோயில், அளவெட்டி* எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3181)

# சித்திரா பௌர்ணமி தினத்தில் தான, தர்மம் செய்து வழிபடுக!

**இந்துக்களின் முக்கிய விரத தினங்களில் ஒன்றான சித்திரா பௌர்ணமி தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்று சித்திரா பௌர்ணமித் திருநாள். உலகிலுள்ள இந்துக்கள் இவ்விரததினத்தை மிகவும் புனிதமான ஒரு நாளாக அனுஷ்டிப்பர்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், சித்திரை நட்சத்திரமும் சேர்ந்து வரும்நாள் சித்திரா பௌர்ணமி எனப்படுகிறது. சித்திரகுப்த விரத நன்னாள் எனவும் இதனைச் சிறப்பாக அழைப்பர்.

இந்நாளில் சந்திரன் முழுவலிமை பெற்று தன் முழுக் கிரணத்தையும் பூமிக்கு அளிக்கிறான். ஆகவே பூகோளம் முழுமையான குளிர்ச்சியை அனுபவிக்கும் நாளாகவும் கருதப்படும். கவிஞர்கள், புலவர்கள் முழுமதி நாளை அன்புக்கும் காதலுக்கும் குதூகலத்திற்கும் தனிச் சிறப்புடைய நாளாக்கி கவிதைகளும், காவியங்களும் புனைந்துள்ளனர்.

சித்திரா பௌர்ணமி விரதமிருப்பவர்கள் அன்றைய தினம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு தவறாது உணவளிக்க வேண்டும் என்று ராஜகேசரிவர்மன் கல்வெட்டு ஒன்று கூறியுள்ளது.

சித்திரா பௌர்ணமியன்று நிலவு தோன்றிய பிறகு மஞ்சள் அல்லது சாணத்தால் வாசலில் பிள்ளையார் பிடித்து வைத்து அதற்கு மலர்சூடி அருகில் தீபம் ஏற்றி, கும்பம் வைத்து அமரத்துவமடைந்த ஆன்மாக்களுக்கு நன்றி கூறும்வகையில் பொங்கிப் படைத்து வழிபடுவர். இறந்த உயிர்கள சூட்சும சரீரத்தோடு அன்றையதினம் உலாவுவதால் நாம் அவர்களுக்கு விரும்பிய உணவைப் படைப்பதால்

### ஞானக்கதிர்

அந்த உயிர்கள் திருப்தி அடைகின்றன.

அமாவாசையும், பௌர்ணமியும் பிதிர்களுக்கு விசேடமானவை. பௌர்ணமியைத் தாயாருக்கும், அமாவாசையைத் தந்தையாருக்கும் உரியனவாகக் கூறுவர்.

இரகசியமாகச் செய்யும் பாவங்களை அரசாங்கத்தால் தண்டிக்க முடியாது. அவைகளுக்கு தெய்வ தண்டனை நிச்சயமாக உண்டு. மக்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்து யமதர்மனிடம் கொடுக்கும் பணியைச் செய்பவர் சித்திர குப்தன் என்றும் நமது பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப பலன்களை யமதர்மன் வழங்குகிறார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

நாம் செய்யும் குற்றங்களை சித்திரம் போல் இரகசியமாகத் தம் மனதில் நிலைநிறுத்திக் கொள்வதால் இவருக்குச் சித்திரகுப்தன் என்ற பெயர் ஏற்பட்டது. இவரே யமதர்மராஜனது கணக்குப்பிள்ளையாவார். இவர் தனது கடமையைப் பாரபட்சமின்றிச் சரியாகச் செய்வதால் இவரது விரத தினத்தில் ஆலயம் தோறும் கும்பம் வைத்தும், நேர்மையாக எழுதுவதால் ஏடு எழுத்தாணி, தராசுபடி கொத்தில் அளந்து நெல் முதலியவற்றை வைத்துப் பூசை செய்வது வழக்கம்.

சமூகஜோதி

**கா.கணேசதாசன்**

மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலயங்களில் கஞ்சி காய்ச்சிப் படையல் இட்ட பின் அடியார்களுக்கும், ஏழைகளுக்கும் வழங்கித தாமும் உண்டு மகிழ்வர். இதனால் கிராம மக்களிடம் ஒற்றுமையும் சமத்துவமும் ஏற்படும். அறம் ஒன்று தான் அழிவில்லாதது என்ற நம்பிக்கையும் எமக்கு ஏற்படும். நாம் செய்த பாவமூட்டையின் கனம் குறையவும், மனக்கிலேசங்கள் குறையவும் இவ் விரதம் துணை புரியும். ★

### யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

பருத்தித்துறை

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

மேற்படி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் புனரமைத்தல் சம்பந்தமான பொதுக்கூட்டம் *எதிர்வரும் (28.04.2002)* ஞாயிற்றுக்கிழமை *முற்பகல் 9.30 மணிக்குப்* பாடசாலையில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் எல்லோரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்
யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி.
பருத்தித்துறை.

(3162)

### சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

இளம்பொருளியலாளர் மன்றத்தினால் நேற்று (25.04.2002) வியாழக்கிழமை நடத்தத் திட்டமிட்டிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் (01.06.2002) சனிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தலைவர்,
இளம்பொருளியலாளர் மன்றம்.
யாழ்.பல்கலைக்கழகம். (3176)

### விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஏப்.26

அரசாங்க சேவை எழுதுவினைஞர் பதவிகளுக்கான ஆள்களைத் திரட்டும் பொதுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மே மாதம் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது. (க)

### மங்களவிடம் 5 மணி நேரம் விசாரணை

முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கடந்த செவ்வாய் லஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவினால் விசாரணை செய்யப்பட்டார். அவர் ஐந்து மணி நேரமாக விசாரணை செய்யப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டது.

ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடன் அட்டையை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஒரு சம்பவம் தொடர்பாகவே அவர் விசாரணை செய்யப்பட்டார். (க)

### ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் வந்தன!

சுழிபுரம்,ஏப்.26

சுழிபுரம் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன. சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க மருந்துகள் ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மருந்து வகைகள் சங்கானை, வட்டுக்கோட்டை பகுதியில் இயங்கும் வைத்திசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளன. (க-28)

### சித்திரைக் கஞ்சி வார்க்கும் வைபவம்

சுழிபுரம்,ஏப்.26

இன்று வெள்ளிக்கிழமை சகல சைவ ஆலயங்களிலும் சித்திரா புத்திர நாயனார் கதை படிக்கப்பட்டு சித்திரைக் கஞ்சி வார்க்கும் வைபவமும் நடைபெறும். ஒவ்வொர் ஆலயத்திலும் காலைமுதல் பிற்பகல் வரை கஞ்சி காய்ச்சி அடியார்களுக்கு வழங்கப்படும். (க-28)

(110ஆவது அத்தியாயமான) நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் 'ஆ' பிரிவின் 2ஆவது பிரமாணத்தின் கீழான

### அறிவித்தல்

2002 மே/ஜூன் மாதத்தில் நடைபெற இருக்கும் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற பதிவாளர் நாயகம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவுள்ளேன் என கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்தவரும் தற்காலிகமாக கொழும்பு - 11, செட்டித்தெரு, 320இல் வசிப்பவருமாகிய ஆறுமுகம் கந்தையா ஆகிய நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

ஆறுமுகம் கந்தையா
432912256V

(3174)

### முதலாம் ஆண்டு நினைவு அலைகள்

மலர்வு 28 - 06 - 1924



உதிர்வு 07 - 05 - 2001

**திருமதி குமாரசுவாமி சரஸ்வதி**

*(பத்தமேனி)*

திதி: பூரணை 26-04-2002

அன்பின் சிகரமாய், அறிவுச்சுடராய்,
அருங் குணங்களின் களஞ்சியமாய்,
பாசத்தின் உறைவிடமாய், நேசத்தின் நிலைக்களமாய்,
குடும்பத் தலைவியாய் இருந்து இக் குவலயத்தில்
எம் வாழ்வுக்கு ஒளியூட்டி, வழிநடத்தி, அரவணைத்து,
ஆதரவு காட்டிய எம் அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன, நூறாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் மனத் திரையில் பதிந்திருக்கும்.

உங்கள் ஆத்மா பரிபூரண சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி!

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருகர், மருகியர்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

(3164)

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 04 - 1934



உதிர்வு 11 - 05 - 1998

**திருமதி சண்முகம் இரத்தினம்**

திதி: 26.04.2002

பொன்பூச் சொரிகுடும்பம் பூரண மதிபோல
நன்பூ தலத்தினிலே நாளும் இலங்கவென
அன்பாய் வளர்த்தெடுத்து ஆளாக்கினவத்திர்
நாலகாண்டு சென்றதம்மா உன்நினைவில்!

*57, மருதடி வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(3161)

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இயேசு "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்.11:28)

பாவம், சாபம், பிசாசின்பிடி, தீராத வியாதியிலிருந்து இயேசு கிறிஸ்து விடுதலை அளிக்கிறார்.

**சுவிசேஷ ஆராதனைகள்**

ஏப்ரல் 25, 26, 27, 28 திகதிகளில்
தினமும் மாலை 4.30 மணிக்கு

இலங்கை பெந்தெகொஸ்தே சபை மண்டபம்
111, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

இலவச உட்பிரவேசம்!

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்.

*யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்!!*

(3180)

## பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியிலும்

# சுதந்திரக் காற்றைச் சுவாசித்து மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழித்துவரும் வன்னி மக்கள்!

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் யுத்த நிறுத்தத்துக்கு அடுத்த படியாக வட பகுதி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய விடயம் யாழ். - கண்டி (ஏ-9) பாதை திறப்பு.

கடந்த 8ஆம் திகதி பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்பதிப்பதற்கு முண்டியடித்துக் கொண்டார்கள். 2 வாரங்களில் 80 ஆயிரம் மக்கள் இந்தப் பாதையால் பயணித்ததாக இராணுவத் தரப்பு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் உள்ள தமது உறவுகளைக் காண்பதற்காகவும் அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு கொள்வதற்காகவும் வன்னி செல்லத் துடித்தன தமிழ் நெஞ்சங்கள்.

இவர்களுடன் கடந்த 12ஆம் திகதி நாமும் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்குச் சென்றோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை வரை சென்ற எமக்கு அங்கு படையினரின் சோதனை நடவடிக்கை காத்திருந்தது. அதனை முடித்துக் கொண்டு பதிவுகளையும் செய்துவிட்டு அங்கிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்தோம். முன்னைய சோதனைகளும் பதிவுகளும் அங்கும் காத்திருந்தன.


'உறவுகளே வருக' என்ற வரவேற்புப் பலகை ஒன்றில் சீறிப் பாயும் புலி மக்களை வரவேற்றுக்கொண்டிருந்தது.

உள்ளே சென்றதும் உடம்பெல்லாம் ஒருவித புதிய உணர்வு சிலிர்த்தது. சுதந்திரக்காற்றைச் சுவாசித்துக் கொண்டு வானத்தில் சிறகடித்துப் பறப்பதாக ஒருவித உணர்வு ஏற்பட்டது.

வரவேற்பு பலகையை அடுத்து அமைக்கப்பட்டிருந்த சில கொட்டகைகளுக்குள் பெண் போராளிகள் பலர் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

தாய், தந்தையரை, உறவினர்களைப் பிரிந்து, இளமையின் ஆசாபாசங்களைத் துறந்து, தம்மை நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்துவிட்ட அந்தப் 'புயல்கள்' தற்போது கிடைத்திருக்கும் ஓய்வில் தமக்குள் கதைத்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

அங்கு சோதனைகளை முடித்துக் கொண்டு கண்டி வீதி வழியில்


உழைப்பையே நம்பியுள்ள தமிழ்த்தாய்

பயணம் தொடர்ந்தது. வீதியின் இரு மருங்கிலும் உள்ள தென்னந்தோப்புக்களைப் பார்த்தபொழுது அவை தமது தலைகளை இழந்து வெறுமனே முண்டத்துடன் நின்றன.

### ஆனையிறவு

அடுத்துவந்தது ஆனையிறவு இராணுவப் பெருந்தளம். கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து பெருமளவான மறவர்களைக் காவுகொண்ட அந்தத் தளம் ஆரவாரமற்று அமைதியாய்க் கிடந்தது.

'ஆனையிறவிலும் ஒருநாள் புலிக கொடி பறக்கும்' என்ற பாடல் வரி நினைவுக்கு எட்டியது.

தளம் முற்றாகத் தகர்க்கப்பட்டுக் கிடந்தது. இராணுவத்தின் பவள் கவச வாகனங்கள், டாங்கிகள் சில ஆங்காங்கே தகர்ந்து போய்க்கிடந்தன.

உப்பு உற்பத்தி நிலையம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் என்பனவும் பலத்த சேதங்களுடன் காட்சியளித்தன.

வன்னிமண்ணில் கால்பதித்த வேளை எம்மை அறியாமல் ஒருவித உற்சாகத்தில் துள்ளிக்குதிக்க வேண்டும்போல் இருந்தது. மனதில் மட்டுமன்றி உடம்பே மகிழ்ச்சியில் மிதப்பதுபோல் இருந்தது.

### வீதிகளின் பரிதாபம்

கண்டி வீதியைத் தவிர அங்கு வேறெந்த வீதியிலும் தார் ஊற்றப்பட்டதற்கான அடையாளங்களோ தென்படவில்லை. மிக நீண்டகாலமாக அவை திருத்தப்படாமல் இருக்கின்றன.

**வன்னி விசிட்**

பிரதான வீதிகள் மட்டும் கிறவல் போடப்பட்டு போக்குவரத்துச் செய்யக் கூடிய அளவுக்கு செப்பனிடப்பட்டுள்ளன.

வீதியால் செல்பவர்கள் வாகனங்களை எதிர்நோக்கும்போது புழுதியில் குளிக்க நேரிடுகிறது. வானங்கள் பெரும்பாலும் மண்எண்ணெயிலேயே இன்னும் இயங்குகின்றன.

### பொருள்களின் விலைகள்

தனியார் கடைகளில் ஒரு லீற்றர் மண்எண்ணெய் 45ரூபாவாகவும் ஒரு லீற்றர் பெற்றோல் நூறு ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறன.

விடுதலைப் புலிகளின் வருவாய்த் துறைக்குச் சொந்தமான சில கடைகளும் இருக்கின்றன. அங்கு ஒரு லீற்றர் மண்எண்ணெய் 35 ரூபாவாகவும் பெற்றோல் 95 ரூபாவாகவும் விற்கப்படுகிறன.

### சேர, சோழ, பாண்டியன்

இந்தக் கடைகள் பெரும்பாலும் சேரன், சோழன், பாண்டியன் என்ற பெயர்களில் இயங்குகின்றன. மாவீரர்களின் பெயர்களும் சில கடைகளுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஆடம்பரப் பொருள்களின் விலைகள் யாழ்ப்பாணத்து விலைவாசியை விட உயர்ந்தே காணப்படுகின்றன. இருந்தாலும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைவு.

### விலைவாசிகள்

ஒருகிலோ அரிசி(குத்தரிசி) 20 ரூபா, தேங்காய்(பெரியது) 7 ரூபா, சீனி ஒரு கிலோ 50 ரூபா, மீன் ஒரு கிலோ 60ரூபா, இறைச்சி ஒருகிலோ 35ரூபா, மரக்கறி ஓரளவு குறைந்த விலையில் என்ற நிலைதான் அங்கு காணப்படுகின்றது.

அங்கு பிரதான தொழிலாக விவசாயம் இருந்தாலும் வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. பெரும்பாலான இளைஞர், யுவதிகள் புலிகளுக்கு சொந்தமான நிறுவனங்களில் வேலை செய்கின்றார்கள். பலர் வேலையற்று இருக்கின்றார்கள்.

வயல்களில் கூலி வேலை செய்யும் இளைஞர்கள் நாள் ஒன்றுக்கு 10 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஆகக் கூடிய சம்பளம் நூறு ரூபா மட்டுமே.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் அங்குள்ள மக்கள் உயிரையே வைத்திருக்கின்றார்கள் என்பதனை மக்கள் சிலருடன் உரையாடியபோது ஊகிக்கமுடிந்தது.

புலிகளின் சில நடவடிக்கைகள் குறித்து மக்களிடம் சிறிய அளவில் அதிருப்தியும் காணப்படுகிறது என்பது மறுப்பதற்கில்லை.

### எல்லைப்படை

பெண்கள், வயோதிபர்கள் என அனைவருமே எல்லைப்படைப் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சிறிய ரகத் துப்பாக்கிகளை மட்டுமன்றி நவீன ஆயுதங்களைக்கூட கையாளத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

மக்கள் பொதுவாக தாக்குதல் நடைபெறும் இடங்களில் போராளிகளுக்கு உதவிகளை வழங்குவதிலும் விழுப்புண் அடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளை கள முனையிலிருந்து அப்புறப்படுத்துவதிலும் இவர்களின் பங்கு அளப்பரியது. இதனைவிட எல்லைகளில் காவல் காத்து நின்று, இராணுவத்தினரின் வருகையை அவதானித்து புலிகளுக்கு தகவல் கொடுப்பதையும் இவர்கள் செய்கிறார்கள்.

### எல்லைப்படை வீரரின் அனுபவம்

சுமார் 45 வயது மதிக்கத்தக்க 5 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரிடம் கேட்டபோது அவர் தனது எல்லைப்படை அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

''நான் எல்லைப்படையில் இணைந்து பலதாக்குதல் சம்பவங்களில் பங்குபற்றியிருக்கிறேன். பின்னர் எல்லைப்படை அணி ஒன்றின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன். எனது மனைவியும் எல்லைப்படைப் பயிற்சி பெற்றிருக்கின்றார்.

"ஒரு நாள் இரவு காட்டுப் பகுதி ஒன்றின் எல்லையில் காவல் காத்துக் கொண்டிருந்தோம். நாம் இருந்த இடத்திலிருந்து சுமார் 40 மீற்றர் தூரத்தில் சலசலப்பு சத்தம் கேட்டது.

ஏதோ மிருகங்கள் என நினைத்து, சற்று பின்னோக்கி நகர்ந்து பதுங்கு குழி ஒன்றுக்குள் இருந்து விட்டோம்.

மறுநாள் காலையில் எழுந்து அந்த இடத்திற்குச் சென்று பார்த்த பொழுது இராணுவத்தினரின் சப்பாத்து கால்தடங்கள் கிடந்தன''. - என்றார். இதுவரை 236 எல்லைப் படை வீரர்கள் தமது உயிர்களை போரில் இழந்துள்ளார்கள்.

போராளிகளுக்கு வழங்கப்படுவது போன்ற இலக்கத் தகடுகள் இவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. ஆனால் சயினைட் குப்பிகள் இவர்களிடம் இருப்பதில்லை.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு, யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதிலிருந்து எல்லைப் படை மற்றும் சிறப்பு எல்லைப் படையினரின் அணிகளுக்கு தற்காலிகமாக ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

### மக்கள் தொடர்பகங்கள்

போராளிகளை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கும் அவர்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் வசதியாக வன்னியில் ஆங்காங்கே மக்கள் தொடர்பகம் என்ற பெயரில் அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு ஒரு தலைமைச் செயலகமும் இருக்கின்றது.

புதுக்குடியிருப்பு இரணைப் பாலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரின் முகாம் ஒன்றுக்குச் சென்று, அங்குள்ள பெண் போராளிகளுடன் கலந்துரையாடிய போது அவர்கள் யாழ்.குடாநாட்டு மக்களின் நலன்களை விசாரிப்பதிலும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அறிவதற்கும் மிகவும் ஆர்வமாக இருந்ததைக் காணமுடிந்தது.

தமது முகாமுக்கு வருபவர்களை நன்றாக உபசரித்து அனுப்பவேண்டும் என்பதில் அவர்கள் முனைப்புடன் இருந்தனர்.

களமுனைகளில் விழுப்புண் அடைந்து, அங்கங்களை இழந்த போராளிகளும்கூட அவற்றை எண்ணி சற்றும் மனம் சோர்வடைந்ததாகவோ, கவலையடைந்ததாகவோ தெரியவில்லை. ஏனைய போராளிகளைப் போல அவர்களும் சிரித்துப்பேசுவதைக்கண்டு ஆச்சரியப்படாமல் இருக்கவே முடியவில்லை.


வன்னி மண்ணில் சுமையுடன் சிறுவன்

இரண்டு கைகளையும் இழந்த பெண் போராளி ஒருவர் சிரித்தபடி ஓடிவந்து அவர்களின் 'பிக்கப்' வாகனம் ஒன்றில் துள்ளி ஏறிய காட்சியைக் கண்டபோது எமது கண்கள் இரண்டிலும் நீர்பனித்தது.

ஆண் போராளிகளின் முகாம்கள் பெரும்பாலும் காடுகளுக்குள்ளேயே அமைந்திருக்கின்றன. பெரும்பாலான காடுகளுக்கு ஒற்றயடிப்பாதை மட்டுமே இருந்தது. அந்தப் பாதைகள் சிலவற்றில் 'உள்நுழைய வேண்டாம்' என்ற

## எல்லைப் படையில் இணைந்து களம் விரைந்த பொதுமக்கள்

புலிகளின் அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டு இருக்கின்றன.

அங்கு பெண் போராளிகள் மட்டுமன்றி சாதாரண பெண்களும் இரவு நேரத்திலும் எந்தவித பயணமும் இன்றி வீதியால் தனியாகச் சென்று வருகின்றார்கள்.

### கலைஞர்கள் பணி

வன்னியில் கடந்த ஆறு வருடங்களாக போராட்டத்தையும் அதன் உணர்வுகளையும் மக்களிடம் இருந்து பிரித்துவிடாமல் பாதுகாத்தவர்களில் அங்குள்ள கலைஞர்கள் முக்கிய இடம்பெற்றுள்ளார்கள் என்பதை பல தரப்பினர் எடுத்துக் கூறினார்கள். விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகமும் அதனுடன் இணைந்த பல்வேறு கலாமன்றங்களும் இதனைப் பேணி வந்திருக்கின்றன.

போராட்டத்தைச் சித்திரிக்கும் தெருவெளி நாடகங்கள், மேடை நாடகங்கள், பாடல்கள் என்பன இந்தக் கலைஞர்களினால் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன.

இந்தக் கலைஞர்களுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பல தடவைகள் தனது கையினால் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி கௌரவப்படுத்தியிருக்கின்றார்.

### காவல்துறை

கடந்த 6 வருடங்களுக்குள் தமிழீழ காவல்துறையினரின் பணிகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதை அறிய முடிந்தது. தற்போது பல நவீன ரக ஆயுதங்களும் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான சந்திகள், வீதிகளில் இரவில் காவல்துறையினர் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர். காவல் துறையினரில் பெரும்பாலானவர்கள் திருமணமானவர்கள். கணவனும் மனைவியும் காவல்துறை உத்தியோகத்தர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

### திரைப்படத்துக்கு அனுமதி

கடந்த 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சினிமா படங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. அந்தத் தடைக்கு எதிராக அதனை ஆட்சேபித்து புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினருக்கு பல கடிதங்கள் சென்று குவிந்ததையடுத்து சினிமா படத்துக்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் புலிகளின் தணிக்கை பிரிவினரால் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே திரைப்படப் பிரதிகள் வெளியில் வழங்கப்படுகின்றன.

வன்னிக்கான பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கியிருக்கின்றது.

காடுகள் மற்றும் மரங்களை வெட்டுவதற்கு விடுதலைப் புலிகளின் வனவளப்பிரிவினரிடம் அனுமதி பெறவேண்டும்.

பொதுவாக பாடசாலைகள், கோயில்கள், மருந்தகங்கள் அனைத்தினதும் பெரும்பாலான கட்டடங்கள் கிடுகினாலேயே வேயப்பட்டிருக்கின்றன.

பல இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து அங்கு சென்றவர்கள் சிறு சிறு கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள். பலரது வீட்டுக்கூரைகள் உக்கிய நிலையில் ஓட்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. மழை பெய்கின்ற நேரங்களில் அவர்கள் நனைவதைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது.

வெளிநாடுகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் எவையும் வன்னியிலுள்ள மக்களுக்கு பெரிதாக மனிதாபிமானப் பணிகள் எதனையும் செய்ததாகத் தெரியவில்லை.

உடனடியாகச் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் ஏராளமாக இருக்கின்றன. ஓரளவுக்காவது நவீன வசதி வாய்ப்புக்களுடன் கூடிய பிரதேசமாக வன்னிப் பெருநிலப் பரப்பை மாற்றுவதற்கு வெளிநாடுகள் உதவவேண்டியது அவசியமானதாக உள்ளது.

### தொலைபேசி

தொலைபேசி வசதிகள் அங்கு இல்லை. விடுதலைப் புலிகள் ஒரு சில இடங்களில் மக்களுக்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதுபோலவே பிரதான வீதிகள் பலவற்றுக்கு அவர்களால் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்து மக்களை விட வன்னியிலுள்ள மக்களுக்கு வசதி வாய்ப்புகள் குறைவாகவே இருக்கின்றன. பொருளாதார ரீதியில் அவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கின்றனர்.

**அற்புதன்**

ஆனால் அவர்களிடம் சந்தோஷம் தாராளமாக இருக்கின்றது. எந்தவித பயமும் இல்லாமல் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டிருக்கிறார்கள். எவருக்கும் பயந்து சந்திகளில் இறங்கிச் செல்வதும் இல்லை. எவரிடமும் அடையாள அட்டைகளைக் காட்டி தமது அடையாளங்களை நிரூபிக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கில்லை. அங்குள்ள மக்கள் அச்சம் எதுவுமின்றி மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். ☆

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

சரவணமுத்து கந்தசாமி அன் சன் நகைத் தொழிற்சாலை

## நவீன நகைக் கண்காட்சி

26.04.2002 வெள்ளிமுதல் 28.04.2002 ஞாயிறுவரை.

☆ எமது சொந்தக் கற்பனையில் உருவாகி எம் கைவண்ணத்தில் மிளிர்வதைக் காண வாரீர்!

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் அனைவரையும வந்து பார்வையிடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3151) இல.601, காங்கேசன்துறை வீதி, தட்டாதெரு, யாழ்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
18-12-1989

இறைவன் அடியில்
21-04-1997

செல்வி

### நிஷாந்தினி கந்தசாமி

(சுண்டுக்குளி மகளீர் கல்லூரி மாணவி)

திதி: 26-04-2002

அன்பே ஆருயிரே அறிவின் திருவுருவே!
"ஆண்டவன் அடிசேர்ந்து ஆண்டுகள் ஐந்து சென்றிடினும்
ஆறாதம்மா உன் பிரிவுத்துயர்
எம் மனக் கண்ணுலகில்
வாடா மலரம்மா உம் எழிலுருவம்"

*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*167 (117), நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3159)

- குடும்பத்தினர்.

## நான்காண்டு நினைவில்



தோற்றம் 1956 - 06 - 22

மறைவு 1998 - 05 - 11

### அமரர் சுப்பிரமணியம் தனபாலசிங்கம் (சந்திரன்)

*(ஸ்ரீ அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளர், திருநெல்வேலி)*

எங்களின் குலவிளக்கே!
சிரித்த உம் முகமும் சீர்கொண்ட உம் வாழ்வும்
எங்களின் மனங்களிலே நிழலாடி நிற்கிறது!

*பொற்பதி வீதி.*
*கொக்குவில்.* (3160)

- மனைவி, பிள்ளைகள், மாமி, மைத்துனர்கள்.

## நீங்காத நினைவலைகள்

7 ஆவது மாதம் முதலாம் வருடம்



திருமதி
**பத்தினிப்பிள்ளை கந்தையா**



செல்வி
**கோகுலராணி கந்தையா**

1922.05.12 ← மண்ணில் → 1954.02.25

2001.09.12 ← விண்ணில் → 2001.05.07

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்தீர்கள்!
இன்று எங்களை மறந்து எங்கே போய்விட்டீர்கள்?
ஆறவில்லை எம் துயரம்! மாறவில்லை எம் கவலை!
நீங்கள் இல்லாத இல்லம் ஒளி இழந்து விட்டதே!
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

*முளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.* (3137)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மானிப்பாய் இந்துவில் டிப்ளோமா வகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு பட்டப்பின் டிப்ளோமா பகுதி I மற்றும் பகுதி II மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்த விரிவுரை வகுப்புகளில முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை 28 ஆம் திகதியும் பட்டப்பின் டிப்ளோமா வகுப்பு மாணவர்களுக்கான விரிவுரைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (க-6)

## வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு பகவதி மாரியம்மன் கோயில்

## அலங்கார உற்சவம்

மேற்படி ஆலய அலங்கார விஷேஷ உற்சவங்கள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

**27.04.2002 சனிக்கிழமை மாலை 5.00 மணி:**
*ஸ்நயன அபிஷேகம்.* அதனைத் தொடர்ந்து *விஷேஷ பூசை* நடைபெற்று அம்பாள் வீதி உலா உற்சவம்.

**02.05.2002 வியாழக்கிழமை மாலை 6.00 மணி:**
*தண்டிகை உற்சவம்.*

**06.05.2003 திங்கட்கிழமை (10ஆம் நாள்) பகல் 11.00 மணி:** *அஷ்டோத்தர சத சங்காபிஷேகம்.*
மாலை 6.00 மணி: அலங்கரிக்கப்பட்ட சிங்க வாகனத்தில் அம்பாள் திருவீதி உலா வருதல் இடம்பெறும்.

(சி-21874) - தேவஸ்தானம்.

யாழ்ப்பாணம் - மாநகரசபை

## இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2002

கீழ்க்காணப்படும் இறைச்சிக்கடைகளை 15.05.2002முதல் 31.12.2002ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 281/25 (ஜி.எஸ்.ரி உட்பட)ம் கீழ்க் காணப்படும் கேள்விப் பிணைப்பணமும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 10.05.2002ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிவரையும் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அன்றையதினம் பி.ப.2.30 மணிக்குமுன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதேதினம் பி.ப.3.00 மணிக்கு கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

*மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.*

**விவரம்:**

| இறைச்சிக்கடைகள் | இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரீ.நீங்கலாக) | ஜி.எஸ்.ரீ. நீங்கலாக மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 4 | 2500/= | 5000/= | 200/= |
| 2. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 5 | 2500/= | 6500/= | 200/= |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 6 | 2500/= | 4300/= | 200/= |
| 4. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 7 | 2500/= | 7800/= | 200/= |
| 5. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 8 | 1500/= | 3000/= | 200/= |
| 6. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 9 | 1500/= | 4000/= | 200/= |
| 7. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 10 | 1500/= | 4000/= | 200/= |
| 8. நாவாந்துறை கருவாட்டுக் கடை | 11 | 1000/= | 2500/= | 200/= |
| 9. நாவாந்துறை கருவாட்டுக் கடை | 12 | 1000/= | 2500/= | 200/= |
| 10. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2500/= | 39000/= | 135/= |
| 11. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை | 03 | 2500/= | 28500/= | 135/= |
| 12. குருநகர் ஆட்டிறைச்சிக் கடை | 07 | 2500/= | 6500/= | 195/= |
| 13. செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500/= | 26000/= | 112/50 |

*குறிப்பு:*
ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் நிலுவைப் பணம்செலுத்த வேண்டியவர்களும் கேள்விப் படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
2002.04.23 (சி-21898)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

### மேரி அலெக்சாந்திரியா குருநாதன்

தாயின் மடியில்
14.10.1959

ஆண்டவனின் பாதத்தில்
25.03.2002

எமது குடும்பத் தலைவி மேரி அலெக்சாந்திரியா நோயுற்றிருந்த வேளையிலும், அவர் இறைபதமடைந்த பின்பும், எம்மோடு இருந்து பல வழிகளில் உதவியவர்களுக்கு எமது நன்றிகள்.

அன்னாரது வழிபாடுகளிலும், மரணச் சடங்கிலும் பங்குபற்றி செபித்த அருட்தந்தையர், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து எமக்கு பக்கபலமாக உழைத்த எமது பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் அவர்களுக்கும் உளம் நெகிழ்ந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

அமரர் மேரி அலெக்சாந்திரியாவின் வாழ்வுக்காக நன்றி கூறி, ஏப்ரல் 26 (வெள்ளிக்கிழமை) 2002, காலை 11.30 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நன்றிப் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இப்பலியில் எம்மோடு இணைந்திடவும், அதன்பின் எம் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

***இறைவன் உங்களை என்றுமே ஆசீர்வதிப்பாராக!***

முகவரி:
*54/7, குறோசற் ஒழுங்கை,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3004)

கந்தசாமி குருநாதன் *(கணவர்)*,
டிலோஜினி *(மகள்)*, டினேஸ் *(மகன்)*,
டிராஜ் *(மகன்)*.

# அற்ப சொற்ப சலுகைகளுக்காக அடிபணிந்து போகாதவர் செல்வா

அரசியலில் பல தலைவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். பின்னர் இவர்களில் பலரின் நாமம் அவர்களது மரணத்தோடே மறைந்து விடுகிறது. இதற்கு விதிவிலக்காக நின்ற தந்தை அவர்கள் மறைந்து 25 ஆண்டுகள் உருண்டோடினாலும் கூட, ஈழத்திலுள்ள சகல சமூகத்த வராலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நினைவு கூரப்படும் பெருமைக்குரியவர் இவரென்றால் மிகையாகாது. இத்தகைய பெருமைக்கு அவரது குணாதிசயங்கள் மட்டுமன்றி அவர் வாழ்ந்த காலம், அக்காலத்தில் நிலவிய பிரச்சினைகளை இனங்கண்டு, இதற்குப் பரிகாரமாக அவர் விட்டுச்சென்ற 'சித்தாந்தம்' என்றால் புனைந்துரையன்று. உண்மையில் தந்தையின் வரலாறு



ஒரு தியாக வரலாறே. அரசியலில் ஈடுபடாது மிகப் பணவருவாய் தந்த நியாய துரந்தரர் தொழிலில் அவர் ஈடுபட்டிருந்தால் ஈழத்தில் உள்ள பணக்காரர் வரிசையில் இவர் இடம் பெற்றிருப்பார். அரசியலில் பிரவேசித்து தமது சொத்தையே எமது சமுதாயத்தின் விடிவிற்காக அர்ப்பணித்த மாமனிதர்தான் இவர்.

1945 - 1948ஆம் ஆண்டுக்காலம் ஈழத்தமிழர் வரலாற்றில் மிகவும் முக்கியமான காலகட்டம் ஆகும். ஈழத்திற்குச் சுதந்திரம் வழங்கிய சோல்பரி ஆணைக்குழு முன்னர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஈழத்தில் அரசியலில் சிறுபான்மை இனத் தவருக்கு அவர்கள் வழங்க இருந்த ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பில் தக்க பங்கைத் தரவேண்டும் என்று வாதாடி அது தோற்ற நிலையில் அன்றைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவுடன் இணைந்து, உரிமை வேட்கையை மறந்து, சலுகைகள் மூலம் இனத்தின் நலன்களைப் பாதுகாக்கலாம் என எண்ணிய காலம் அது. இவர்களின் உதவியுடன் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பிரிவினரான மலையகத் தமிழரது குடியுரிமையைப் பறிக்கும் சட்டங்கள் 1948, 1949ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

### போராடினால்தான் நமது உரிமை கிடைக்கும்.

இக்கட்டான இந்தக் காலகட்டத்தில்தான், தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் ஒரு தலைவனாக, காலத்தின் தேவைக்கேற்ப படைக்கப்பட்ட, ஆனால் சகல விதத்திலும் அத்தேவையைப் பூர்த்தி செய்யும் தலைவனாகப் பிரகாசித்தார். மலையகத் தமிழருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட மசோதா மீது அவர் பேசும்போது 'இன்று அவர்களுக்கு நாளை எங்களுக்கு' என இரத்தினச் சுருக்கமாகக் கூறிய வார்த்தை மிகவும் தீர்க்கதரிசனமான - பொருள் பொதிந்த - வார்த்தை என்பதைக் கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் உறுதி செய்துவிட்டன. இக்காலகட்டத்தில்தான் நாம் சரணடையக்கூடாது, போராடினால்தான் நமது உரிமை கிடைக்கும் எனக் கூறியதோடு இதற்கான ஓர் அரசியல் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் அன்னார் ஆரம்பித்தார்.

19.12.1949இல் இக்கட்சியின் ஆரம்ப மாநாட்டில் அவர் ஆற்றிய உரை மிகவும் தீர்க்க தரிசனமானது. தற்போது போன்று, தமிழர் வரலாறு பற்றிய விரிவான தடயங்களும் ஆய்வுகளும் முன்னிலை பெறாத அக் காலகட்டத்தில் ஈழத்தின் ஆதிக் குடிகள் மட்டுமன்றி அரசியல் அதிகாரத்தை மாறிமாறி பகிர்ந்து கொண்ட இனம் தமிழினம் எனக் கூறியதோடு இதற்கு ஒரு தேசிய இனத்திற்குரிய மொழிப் பாரம்பரியம், கலாசாரப் பாரம்பரியம், பழக்க வழக்கங்கள், பொருளாதாரக் கட்டமைப்பு, புவியியல் ரீதியில் இணைந்த வாழ்வின் மூலம் மரபுவழித் தாயகமும் உண்டு என முழங்கினார். இதனால் உலகின் ஏனைய தேசிய இனங்களைப் போன்று தனது தலைவிதியை, அதாவது தனக்கு எத்தகைய அரசமைப்பு உகந்தது எனத் தீர்மானிக்கும் உரிமையும் தமிழினத்துக்கு உண்டென்றார். இத்தகைய உரிமைகளை ஒற்றையாட்சி அரசமைப்பில் இன்றி ஒரு சமஷ்டி அரசமைப்பில்தான் பெற முடியும் என்றும், இத்தகைய அரசாட்சி நடைபெறும் நாடுகளாக சுவிற்ஸர்லாந்து, கனடா போன்றவற்றையும் உதாரணங்களாகக் காட்டினார். சாத்வீக வழிமூலம்தான் உரிமைப் போரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதும் அவரது விருப்பம் ஆகும். காரணம் இவ்வழியில் அழிவுகள் குறைவு என்பதாகும்.

### தமிழ்த் தேசிய இனத்தின் ஒருமைப்பாட்டுக்கு உறுதி

தந்தையின் வருகை தமிழரின் அரசியல் வரலாற்றில் 'போராட்டம்', 'தியாகம்' என்ற சொற்பிரயோகங்களைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தது மட்டுமன்றி 'தமிழ் பேசும் மக்கள்' என்ற பதத்தையும் முன்னிலைப்படுத்தியது. முஸ்லிம்கள், மலையக மக்கள் இவ்வரிசையில் இணைந்தனர். தமிழர் தாயகத்தில் வடக்கு - கிழக்கு மாகாண மக்களை இணைக்கும் வகையில் கட்சியின் முதல் தேசிய மாநாடு 1951இல் திருகோணமலையில் நடைபெற்றது. தந்தையின் சிறப்புக்கு மற்றுமொரு காரணம் கட்சியை வெறும் அரசியல் கட்சியாக அவர் ஆரம்பிக்கவில்லை. இதனை ஓர் இயக்கம் என்றே அவர் அழைத்தார். இயக்கத்தின் தலைமை மாறிமாறி வடக்கு - கிழக்குப் பகுதித் தலைவர்களிடம் சென்றடைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட இவர், கட்சியின் மாநாடுகளையும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பல்வேறு தலைநகர்களில் நடத்தி, தமிழ்த் தேசிய இனத்தின் ஒருமைப்பாட்டை உறுதிசெய்தார். முஸலிம் மக்களையும் தமது கோட்பாட்டின் கீழ் அன்னார் அரவணைத்தார்.

தமிழ் மக்கள் தம்மை எதிர் நோக்க இருக்கும் ஆபத்துப் பற்றி விளங்கிக் கொள்ளாத நிலையில், 1952இல் நடைபெற்ற தேர்தலில் அவர் தோல்வி கண்டார். இத் தோல்வியால் அவர் மனந்தளரவில்லை. இத்தோல்வியைக் கண்டு தமது வருவாய்மிக்க தொழில்களையே தியாகஞ்செய்து இன விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த தளபதிகளும் இவரை விட்டு ஓடவில்லை. தமது அர்ப்பணிப்பாலும் வீரம் கலந்த பேச்சுக்களாலும் பட்டிதொட்டி எல்லாம் தந்தையின் சித்தாந்தத்தை எடுத்துச் சென்று தந்தையின் தலைமையை வலுப்படுத்திய பெருமைக்குரியவர்கள் இவர்கள். இவர்களின் செயற்பாடுகள்தான் இளைஞர்களையும் தந்தையின் இயக்கத்தில் அணிதிரள வைத்தன. இவர்களின் துணை இல்லாதிருந்தால் தந்தையின் அரசியல் சித்தாந்தம் பின்னர் ஈட்டிய வெற்றியை அடைந்திருக்கும் என்பது சந்தேகம். ஆரம்பகாலத்தில் தந்தைக்குப் பக்கபலமாக நின்றவர்களில் கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கம், இரும்பு மனிதன் இ.மு.வி.நாகநாதன், திருமலை தந்த செல்வர் ந.இ.இராஜவரோதயம், நாவலர் அ.அமிர்தலிங்கம், சொல்லின் செல்வர் செ.இராசதுரை ஆகியோர் முக்கியமானவர்கள்.

எனினும், 1956ஆம் ஆண்டுத் தேர்தல் முதல் 1975வரை நடைபெற்ற தேர்தல்களில் ஈழத்தின் எந்த ஓர் அரசியல் தலைவரும் சாதிக்க முடியாத சாதனை இவரை மட்டுமே சென்றடைந்தது. 5 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றியீட்டியது மட்டுமன்றி 21 வருடங்கள் இறக்கும்வரை தன்னிகரில்லாத் தலைவனாக, தமிழ் மக்களுக்குச் சேவை செய்த பெருமை, தமிழ்த் தலைவர்களில் தந்தைக்கே உண்டு எனலாம்.

### மக்கள் மனதில் எழுச்சிப் பிரவாகம்

தமிழ் மக்களின் விடிவிற்காக அவர் மேற்கொண்ட மிகவும் காத்திரமான பங்களிப்பு தமது இலட்சியத்தை மக்கள் மயமாக்கி, மக்கள் மனதில் ஒருவித எழுச்சியையும் உரிமை வேட்கையையும் ஏற்படுத்தியதுதான். 1956இல் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக அவரும், அவரது தளபதிகளும் மேற்கொண்ட சத்தியாக்கிரகம், 1961இல் வடக்கு - கிழகககு மாகாணங்களில் உள்ள கச்சேரிகளில் அவர் தொடக்கிவைத்த சத்தியாக்கிரக இயக்கம், 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழக் கோரிக்கையை மக்களின் ஆணைக்குச் சமர்ப்பித்து அதனைப் பெற்றது ஆகியவற்றை உற்று நோக்கும்போது மக்களை இவ்விலட்சியத்தின் பங்காளிகளாக்கி, இதன் பலனை அவர்களை உணரச்செய்து, தமது இயக்கத்தின் பின்னே அவர்களை அணி திரளச் செய்தது இவரின் மிகப் பெரிய சாதனையாகும்.

அத்தோடு நின்றுவிடாது 1957, 1965 ஆகிய ஆண்டுகளில் இந் நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த இரு பிரதமர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களை தமது இலட்சியத்தின் ஏணிப்படிகளாக அவர் கருதினாரே தவிர, இவற்றை முற்றுமுழுதாகத் தமிழரின் பிரச்சினையைத் தீர்த்த ஒப்பந்தங்களாக அவர் கருதவில்லை. இத்தகைய ஒப்பந்தங்கள் தமிழரின் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்த ஒப்பந்தங்கள் எனலாம். இந்த ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டபோது இதன் தாக்கம் யாதெனில் சிங்களத் தலைவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்பது மட்டுமல்ல, தமிழரின் நியாயபூர்வமான கோரிக்கைகளைத் தானும் வழங்கத் தயாரில்லை என்பதுமாகும். இதன்மூலம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் மூலம்தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்

## தமிழர் தாயக எல்லைகளைக் காக்க உரத்துக் குரல் கொடுத்தார் தந்தை

என எடுத்துக்காட்டினார். 1972இல் இந்தியாவுக்குத் தலைவர் அமிர்தலிங்கம் தம்பதிகளுடன் அவர் மேற்கொண்ட பயணம் இதனையே வெளிப்படுத்துகிறது. சுருங்கக்கூறின் ஈழத் தமிழர் பிரச்சினையை அரசின் பல்வேறு அழுத்தங்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றின் மத்தியில் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதில் தந்தையும் அவரது சகாக்களும் முன்னின்று உழைத்தனர். இதற்குச் சான்று பகருவனவாக அமைவதுதான் 1974இல் நடைபெற்ற 20ஆவது பொதுநல அமைப்பு நாடுகளின் மாநாட்டிற்கும் 1975இல் நடைபெற்ற அனைத்துலக நாடாளுமன்ற ஒன்றிய மாநாட்டிற்கும் 1976இல் நடைபெற்ற 5ஆவது அணிசேரா மாநாட்டிற்குச் சமர்ப்பித்த மகஜர்களாகும்.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சாத்வீகமே தமது வழி எனக் கூறிய தந்தையின் சித்தாந்தத்தை அடக்க அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள், அட்டூழியங்கள், கொலைகள் போன்றனவற்றால் ஈழத்தில் சாத்வீகம் தோற்றநிலையில் ஆயுதப்போராட்டம கால்கொள்ளும் என்பது தவிர்க்கமுடியாத வரலாற்று நிகழ்வாகும் என்பதைக் காலிமுகத்தில் தந்தையையும், தொண்டர்களையும் தாக்கும்போதும், 1961ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகிகளை இராணுவம் தாக்கும்போதும் அரசுகள் சிந்திக்கவில்லை. தமிழருக்கு ஒரே ஒருவழி போராடுவது என்ற தந்தையின் தாரக மந்திரம், சாத்வீகம் மூலமும் ஒப்பந்தங்களின் மூலமும் தமிழரின் தேசியத்தன்மை, மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுக்கு ஒரு காத்திரமான பரிணாம வளர்ச்சியை அளித்தது எனலாம். ஆயுதப் போராட்டம் இதனால் தந்தையின் மறைவோடு முன்னிலை பெற்றது ஒரு தவிர்க்கமுடியாத வரலாற்று நிகழ்வாயிற்று.

தந்தை தீர்க்கதரிசனமாக இன்னும் சிலவற்றைக் கூறினார். தன்னுடன் பேசுவது, பிரச்சினையைத் தீர்ப்பது இலகு, தனக்குபின் வரும் இளைஞர்களுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பது இலகு அன்று என்பதாகும். 1976இல் தாம் இதுவரை பற்றிநின்ற சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடுகிறேன் என்று நாடாளுமன்றத்தில் கூறியபோது, அதில் பிரசன்னமாக இருந்தவர்கள் இதன் தாக்கத்தினை அன்று உணரவில்லை. அடக்குமுறை மூலம் தமிழரின் அபிலாஷைகளை அடக்கிவிடலாம் என நம்பினர். தந்தை இறந்து 25 ஆண்டுகளாயினும் இக் கோரிக்கை இன்றும் அரசியலில் முதன்மை பெற்றுள்ளதானது தந்தையின் தீர்க்கதரிசனத்திற்கு மற்றுமோர் உதாரணமாகும். சமஷ்டிக் கோரிக்கையைத் தாம் கைவிட்டுவிட்டதாக 1976 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 19 ஆம் திகதி தந்தை ஆற்றிய உரைக்குப் பின்னர் லண்டன் கார்டியன் பத்திரிகை செய்தியாளர் அவரைப் பேட்டிகண்டார். அப்போது அவர், உங்களின் இலட்சியத்தை எவ்வாறு அடையப் போகிறீர்கள் எனக்கேட்டார். அதற்கும் இரத்தினச் சுருக்கமாக அவர் கூறிய பதில் இதுதான். 'நாங்கள் தொடர்ந்து தொந்தரவு கொடுத்தால் அவர்கள் (ஆட்சியாளர்) எங்களை எங்களின் வழிச் செல்ல விட்டுவிடுவார்கள்' என்பதாகும். தீர்க்கதரிசனமாகக் கூறிய இவ்வார்த்தை பொய்க்கவில்லை என்பதைக் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுவரும் உரிமைப் போராட்டம் நிரூபித்துவிட்டது என்றால் புனைந்துரையன்று.

தந்தையிடம் காணப்பட்ட மிகச் சிறப்பான அம்சம், தன்னுடைய காலத்திலேயே இப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்பதல்ல. அற்ப சொற்ப சலுகைகளுக்காகச் சரணடைந்து, தமிழர் பிரச்சினையைத் தீர்த்த பெருமைக்குரிய தலைவராக அவர் வாழ விரும்பவில்லை. தக்க, கௌரவமான தீர்வுகிட்டும்வரை போராடுவதும் தமது காலத்தில் இதற்குரிய தீர்வுகிட்டாவிட்டால் இதனை அடுதத சந்ததிக்குப் பக்குவமாகக் கையளிப்பதும் அவரது கோட்பாடாகும். இக்கோட்பாட்டை திருகோணமலையில் 1951 இல் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதல் தேசிய மாநாட்டில் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

*"இவ்வியக்கத்திற் பணி செய்யும் ஊழியர்களாகிய நாம், நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கிறோம். எம் தலைமுறையிற் கைகூடாதுவிடினும், நாம் இப்போரை நடத்தி, எமக்குப்பின் வரும் சந்ததியாரின் கையிற் கொடுப்பது எமது கடன். எம் பின்னே அரும் பெரும் வீரர்களை எம் இனம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாக வாயினும் இருப்போமாக"*

எவ்வளவு அடக்கத்துடன் மேற்கூறிய வார்த்தைகள் முன்மொழியப்பட்டன என்பதை இன்றைய காலகட டத்தின் நிகழ்வுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

### சிங்களக் குடியேற்றங்களின் வேகம் தணிந்தது

தந்தையின் அப்பழுக்கற்ற, கறைபடியாத, அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கை ஒரு பெரும் இயக்கத்தையும் தமது சித்தாந்தத்தைப் பற்றி நிற்கும் தொண்டர்களையும் படைத்து விட்டது. தந்தையின் வழிநின்ற தலைவர்களும் பொது வாழ்க்கையில் தூய்மையைப் போற்றியதோடு, தமது எதிர்காலச்




**1961ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தின் ஓர் அம்சமாக வெளியிடப்பட்ட தமிழரசு தபாற்சேவை முத்திரை.**

சுபீட்சத்தையும், வளமான வாழ்க்கையையும் இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர்கள். சளைக்காது, சரணாகதியடையாது தந்தையின் இலட்சியங்களை முன்னெடுத்துச் சென்ற பெருமை இவரின் சகாக்களுக்கும் உண்டு. காத்திரமான பேச்சுக்களால் நாடாளுமன்றத்தில் எமது இனத்தின் நலனைப் பாதிக்கும் சட்டங்களை எதிர்த்ததால், இன்று சிங்களத்தோடு தமிழும் அரச கரும மொழியாகிவிட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் வேகந் தணிந்தது. இதனால் தமிழ்ப் பிரதேசம் காப்பாற்றப்பட்டது. மக்களை விழிப்புடன் இருக்கச்செய்த பெரும் பணியை இவர்கள் செய்தார்கள். சிங்களத்தை அரசகரும மொழியாக்கி, தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை அமுல் செய்வதன் மூலம் தமிழரின் தனித்தேசியத் தன்மையையும், மரபுவழித் தாயக உரிமையையும் அழித்துவிடலாம் என மாறிமாறி வந்த அரசுகளின் திட்டங்களைத் தவிடுபொடியாக்கியது தந்தையினதும் அவரது சகாக்களினதும் தியாகம் என்றால் மிகையாகாது. இத்தகைய பணியை அவர்கள் அன்று செய்திருக்காவிட்டால் இன்று ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மிகமிகச் சிரமமாகவே இருந்திருக்கும். இதற்கு நல்ல உதாரணம் மலேசியாவாகும். இங்கு 50 வீதம் மலாயர்கள்தான் வாழ்கிறார்கள். சீனர் 40 வீதம், இந்தியர் 10 வீதம். ஆனால், சீனர்களால் மலாயர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக ஒரு வலுவுள்ள போராட்டத்தை நடத்த முடியவில்லை. காரணம் மலாயர்களுடன் அவர்கள் இணைந்து பரந்து வாழ்வதாகும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சேற்றினில் சந்தனம்

**அகன்ற மார்புமில்லை; அடலேறு நடையுமில்லை;**
**கனன்ற மொழியுமில்லை; கடிய நோக்குமில்லை.**
**எனினும் இவர் அன்று இராணுவத் தலைவன்போல**
**பெரும்படை திரட்டி இன உணர்வினை ஊட்டிநின்று**
**தாயகம், சுயநிர்ணயம், தேசியம் என்னும் மூன்று**
**தாரக மந்திரத்தை நாவெலாம் உரைக்கவைத்தார்.**

**கருவிகை யேந்துங்காலம் வருமென எதிர்வுகூறி**
**கனலெனும் இளைஞர்கூட்டம் கடலெனத் திரள்வதற்கு**
**கருவதாய் அமைந்த தந்தையுருவமோ ஒல்லியாகும்**
**'தருகிறோம் பதவி' யென்று அரசினர் கோரக்கேட்டு**
**அருவருத் ததனைத் துச்சம் எனநினைத் துதறித்தள்ளி**
**பெருமகன் ஆனதந்தை நினைவுநாள் மெய்சிலிர்க்கும்.**

**பூவினும் மென்மையான புனிதனின் மெய்ம்மை வார்த்தை**
**பூகம்ப உணர்வைநெஞ்சில் ஊட்டிய விந்தையென்ன?**
**நாவொடு செயலும் ஒன்றி தூய்மையாய் வாழ்ந்ததாலே**
**நாடெலாம் புகழ்விளங்க நல்லதோர் தலைவனாகி**
**மோசடி பொய்மையூழல் மிகுந்திடு அரசியலாம்**
**சேற்றினில் சந்தனமாய் திகழ்ந்தவர் தந்தை செல்வா!**

*புத்தூர்.வே.இளையகுட்டி*

*(தந்தை செல்வாவின் 25ஆவது சிரார்த்ததினம் இன்றாகும்.)*

# அற்ப சொற்ப சலுகை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், தமிழ்ப் பிரதேசங்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சாத்வீகம் தோற்றுநிலையில், சாத்வீகத்தின் தத்துவத்தையும் மகத்துவத்தையும் மாறிமாறிவந்த அரசுகள் புரியாத நிலையில் ஓர் ஆயுதப் போராட்டம் நிலைபெற்று மேலோங்க வழி செய்தது. சுருங்கக்கூறின் மூத்த பரம்பரை இளைய பரம்பரையிடம் தமது சித்தாந்தமாகிய தமிழ்த் தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுய நிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகள் அடங்கிய சித்தாந்தத்தைப் பக்குவமாகக் கையளித்துள்ளது. இளைய தலைமுறை தமது அப்பழுக்கற்ற தியாகத்தாலும், அர்ப்பணிப்புகளாலும், தீர்க்கதரிசனமிக்க தலைமைத்துவத்தாலும் தமிழர் பிரச்சினையைப் பிரச்சினையாகத் தொடர்ந்து வைத்திருக்கிறது. எதற்கும் விலைபோகாத கொண்ட இலட்சியத்திலே உறுதியுடன் செயற்படும் இயக்கமாக இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னிலை பெற்றிருப்பது தந்தையின் இலட்சியம் பெற்ற பெருஞ்சாதனையாகும். இளைஞர்களுடன் பேசுவது கடினம் என்று தந்தை கூறிய வார்த்தைகளின் கனத்தை அவர் கூறிய காலத்தில் ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ஆனால் இன்று பெரும்பான்மைச் சமூகத்தவர் மத்தியில் தந்தையுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை அமுல் நடத்தியிருந்தால், அவருடன் பேசித் தீர்த்திருந்தால் இத்தகைய அனர்த்தங்களை நாடு சந்தித்திருக்காது என்று பலர் ஏங்குகின்றனர். இதனால் தந்தையின் இலட்சியத் தலைமையின் பங்களிப்பையும் அதே இலட்சியத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து நிற்கும் இளைய தலைமுறையின் தலைமையின் பங்களிப்பையும் நான் போற்றாமல் இருக்க முடியாது. தமிழர் பிரச்சினை என்றால் தந்தை செல்வநாயகத்துடன் தான் பேசவேண்டும் என்ற நிலை போய் இன்று வேலுப்பிள்ளை பிரபாகரனுடன்தான் பேசவேண்டும் என்ற நிலை காணப்படுவதானது 50 வருட சாத்வீக, ஆயுதப் போராட்டத்தில் எதற்கும் விலைபோகாது தம்மையே தியாகம் செய்த நமது மக்களின் பங்களிப்பையும், தலைவர்கள் பின்னே அணிதிரண்ட தமிழ் மக்களையும், நாம் ஒரு கணம் நினைத்துப் பார்ப்பதும் தந்தையையும் அவரது சகாக்களையும் நினைவு கூருவதும் இத்தினத்தில் எமது கடமையாகிறது. அத்துடன் விடுதலைப் புலிகளின் போராட்டத்துடன் தமிழ்ப் பேசும் இனம் அணிதிரளுவதும்தான் தந்தையின் தியாகத்திற்கும், இலட்சியத்திற்கும், அபிலாஷைகளுக்கும் நாம் ஆற்றும் நன்றிக்கடனாகும். ☆

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.26

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் இந்து இளைஞர் கலைமன்றத்தின் ஏற்பாட்டில் மேற்படி ஆலய மண்டபத்தில் ஒவ்வொரு பூரணை தினத்திலும் நடைபெற்றுவரும் தொடர் சமயச் சொற்பொழிவில் இன்று மாலை 4 மணிக்கு 'தீட்சை' என்னும் பொருளில் உரை இடம்பெறும்.

சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார். கந்தர்மடம் வேதாந்த மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார். (எ)

## உரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.26

இயற்கை மூலிகைகளின் அரசன் காளான் உணவுக் குளிகை தொடர்பான உரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முத்திரைச்சந்தை கல்வித்திணைக்களத்திற்கு அருகில் உள்ள முன்பள்ளி மூலவள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த உரையாடலில் -

வைத்திய கலாநிதிகளும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், உரை நிகழ்த்துவர். இது தொடர்பான வீடியோ தொலைக்காட்சியும் காண்பிக்கப்படவுள்ளது. (க-6)

## மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

**28.04.2002 ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் நடைபெற இருந்த மேற்படி போட்டி மழை காரணமாக 05.05.2002 ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
*நீர்வேலி.*

(3189)

## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகிறோம்



சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதம குருவும்,
சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவாகம ஞானசாகரம்

**சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள்**
**ஸ்ரீமதி காஞ்சனா**

தம்பதியினருக்கு 28.04.2002 ஞாயிறு ஜேர்மனியில் நடைபெறவுள்ள மணிவிழா வைபவம் சிறப்புற நடைபெறவும், தம்பதியினர் சீருஞ்சிறப்புமாக பேரும் புகழும் பெற்று பெருவாழ்வு வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*சுன்னாகம்.*
*25.04.2002* (3185)

**ஐயனார் தேவஸ்தானம்.**

## தெல்லிமாநகர் காசிவிநாயகர் தேவஸ்தானம்
## மஹோற்சவப் பெருவிழா

| | | | |
|---|---|---|---|
| 27.04.2002 | சனி | முற்பகல் 11.00மணி | கொடியேற்றம் |
| 03.05.2002 | வெள்ளி | பிற்பகல் 3.00மணி | வேட்டைத்திருவிழா |
| 04.05.2002 | சனி | முற்பகல் 10.30மணி | சங்காபிஷேகம் |
| | | மாலை 5.00மணி | சப்பறத் திருவிழா |
| 05.05.2002 | ஞாயிறு | முற்பகல் 10.00 மணி | விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்தல |
| | | பிற்பகல் 12.30 மணி | பஞ்சமுகார்ச்சனை |
| 06.05.2002 | திங்கள் | முற்பகல் 11.30 மணி | தீர்த்தஉற்சவம் |
| 07.05.2002 | செவ்வாய் | மாலை | சித்திபுத்தி சமேத விநாயகருக்குத் திருக்கல்யாண வைபவம் |
| 10.05.2002 | வெள்ளி | முற்பகல் 10.00 மணி | சேத்திரபாலகர் விசேட ஆராதனை |

*மஹோற்சவ குரு:* **சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்.**

*வீணாக்கடவை,*
*தெல்லிப்பழை.* (சி-21920)

சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்கள்
*பிரதமகுரு*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பட்டப்பின் படிப்புகள் பீடம்
### பண்பாட்டியலில் முதுமாணிக் கற்கைநெறி
### 2002/2003

மேற்படி கற்கைநெறிக்கான தொடக்க நிகழ்வு 2002. 04. 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10. 00 மணிக்குப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கற்கைநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தவறாது இந்நிகழ்வில் பங்குபற்றவும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (C-21919)

## மரண அறிவித்தல்
### திருமதி துரைச்சாமி கௌரியம்பாள்

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி கௌரியம்பாள் நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் துரைச்சாமியின் அன்பு மனைவியும் யோபிசறோஜா (நவாலி), வரதராசா (கோண்டாவில்), யோகராசா (பிரான்ஸ்), யோகராணி (திருகோணமலை), தனராசா(கனடா), ஜெயராசா(U.K.), விமலராணி (ஜேர்மனி), கோமதி (கனடா), கல்யாணி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயரட்ணம், செல்வராசா, புஸ்பதேவி, பிறேமதாசா, லோகநாதன், ஜெயந்தி, தயாளசெல்வி, சந்திரகுமார், அருள்மொழி ஆகியோரின் அன்பு மாமியும், தயாபரன், கௌசிகன், பிரியதர்சினி, வினோதன், பிரகாஷினி, கம்ஸா, யனுஜா, சுயன், அருண், அஸ்வின், லாவண்யா, அகல்யா, அருள்ராஜ், சுகந்தினி, சுபாசினி, புஸ்பராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2002) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு ஆரையம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*"கௌரிவாசம்"*
*நவாலி வடக்கு(புலவர் வீதி),*
*மானிப்பாய்.* (3187)

தகவல்:
வரதராசா (வரதன்- மகன்,
சைக்கிள்கடை கோண்டாவில்)

# எம் நெஞ்சைவிட்டகலா அன்புத் தெய்வத்தின்
# 100ஆம் நாள் நினைவலைகள்



மண்கும்பானைச் சேர்ந்த உயர்குடித்தோன்றல்

## அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர் - மைதிலி ஜுவல்லறி, மதனா ஜுவல்லறி)

வித்தாய்: 14-04-1947
வேறாய்: 17-01-2002

**உந்தன் உறுநோயை ஒருநாளுமுரையாமல்**
**எங்கள் வாழ்வுக்காய் ஏற்றமுற உழைத்தீர்கள்**
**சொந்த மனையாளும் சோடிழந்து தவிக்கின்றாள்**
**சிந்தைதனில் மக்கள் சிரம் தாழ்த்தி வணங்குகின்றார்.**

**அன்புத் தலைமகனே! ஆற்றாது தவிக்கின்றேன்**
**உற்றார், உறவினர்கள், ஊரவர்கள், நண்பரெல்லாம்**
**கற்றாவின் மனம்போல் கசிந்துருகிக் கதறுகின்றார்**
**இற்றைநாள் வரையும் எம்மோடிருந்த**
**இன்முகத்தைக் காணாது எவ்வழியும் தேடுகின்றோம்**
**பற்றுடன் வந்தொருக்கால் பார்த்து நீர்போனாலென்ன?**

பாசமிகு தந்தையே!
நீர் எமைப் பிரிந்து நூறு நாள்கள் என்ன நூறு யுகங்கள் சென்றாலும் மறக்கமுடியாது!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*199, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/21917)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# நவீன சூர்ப்பனகை ஜெயாவின் வாய்வீச்சு!

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது, செல்வி ஜெயலலிதா சமீபத்தில் இந்தியத் தொலைக்காட்சியில் அளித்த பேச்சைக் கேட்டபோது -

தமிழ்நாட்டு பழமொழி ஒன்று அப்போது ஞாபகம் வந்தது. "மதுரையில் அடிவேண்டிய ஒருவனுக்கு மானாமதுரையில் மீசை துடித்ததாம்" ஒருவேளை செல்வி ஜெயலலிதா போன்றவர்கள் அன்று இருந்திருக்கிறார்கள் அல்லது இனிமேல் பிறப்பார்கள் என்ற தூரநோக்கோடுதான் அந்தப் பழமொழி பிறந்திருக்கிறது.

காலமெல்லாம் கண்ணீர் விட்டுக் கதறிய ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு விடிவுகிட்டும் சமயம் குட்டையைக்கலக்க எண்ணுகிறார் ஜெயலலிதா. அவரது அபத்தமான வசனங்களின் பொருள் "பிரபாகரனை கதாநாயகனாகப் பார்க்கிறார்கள், மக்கள் அவரை ஒரு தலைவன் என்று வாழ்த்துகிறார்கள்'' என்பதாகும்.

பிரபாகரனை இலங்கை அரசு பிடித்துத் தரவேண்டுமாம், இந்தியப் படையினர் இங்குவந்து பிரபாகரனை மடக்கிப் பிடித்த பின்னர் இந்தியா தண்டனை வழங்குமாம். இதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்புத் தர வேண்டுமாம். இந்தியப் படையினர் இலங்கையில் இருந்தபோதே அவர்களின் 'திறமையைப்' பற்றி ஜெயலலிதாவுக்குத் தெரியாமற்போனது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இந்தியப் படையினர் மூக்கறுபட்ட நிலையில், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று இலங்கையில் இருந்து சென்றது ஜெயலலிதாவிற்குத் தெரியாதா? அல்லது மறந்து விட்டாரா? இப்போதான் அவருக்கு 'மீசை துடிக்கிறது'

இந்திய அமைதிகாக்கும் படை இங்கிருந்து தோல்வியுடன் திரும்பிய போதல்லவா அவர் துடித்திருக்க வேண்டும்! எனவேதான் சொல்கிறேன் "மதுரையில் அடிவேண்டி ஆற்றாது ஓடிய ஒருவனுக்கு மானாமதுரையில் போகும் போதுதான் மீசை துடித்ததாம்''

ஜெயலலிதாவின் பேச்சை இந்திய அரசு செவிமடுக்குமானால், சூர்ப்பனகையின் சொல்லைச் செவிமடுத்த இராவணனின் கதைபோல ஆகிவிடும் நிலைமை. ஆனால், அப்படி நடக்க வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகிறது.

இலங்கையைத் தன்னுடைய செல்வாக்கின் கீழ் வைத்திருக்க இந்தியா முயல்வதாக சந்தேகம் எழுந்துள்ள நிலையில், ஜெயலலிதா போன்றவர்களின் பேச்சுக்கள் அந்தச் சந்தேகத்தை உறுதிசெய்து விடுவன போன்று அமைகின்றன.

இலங்கையில் பிரச்சினை தீர்ந்து மூவினமக்களும் ஒன்றாயிருந்தால் பலமான நாடாக இலங்கை உருவாகிவிடும். தாம் வல்லரசு நாடென்றாலும் அப்போது எதுவும் செய்யமுடியாது என்ற பயத்தினால்தான் சமாதானத்தைக் குழப்ப இந்தியா முயற்சி செய்கிறது என நாம் எண்ணுவதில் என்ன தவறு?

அப்படி அல்ல என்று இந்தியா சொல்லுமானால் இலங்கையில் சமாதானத்தை மனதார வரவேற்பின், சமாதானப் பேச்சை தமிழ் நாட்டிலோ அல்லது இந்தியாவின் எப்பகுதியிலேயோ வைப்பதற்கு ஏன் இணங்கவில்லை? பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினாலும், தலைவர் பிரபாகரனாலும் சேர்ந்து ஆக்கப்பட்ட சமாதான முயற்சி வெற்றிபெறாது போக வேண்டும் என்றுதான் இந்தியத் தலைவர்கள் நினைக்கிறார்கள் என்று கருதுவதற்கு இடமிருக்கிறதல்லவா?

நாட்டு மக்களின் பணத்தில் தன் வீட்டுத் திருமணத்தை ஆடம்பரமாக நடத்திய, குளிரூட்டப்பட்ட ஊர்திகளை, மாளிகைகளை மக்கள் காசைக் கொள்ளையடித்து வாங்கிய தமிழக அரசியல்வாதிகளுக்கு உயிரைத் தியாகம் செய்து மக்களுக்காகப் போராடுபவர்களைப் புரிந்துகொள்ள முடியாதுதான்.

ஆனால் ஓர் இனத்தின் விடியலை தமது சுயநலத்துக்காக 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று சீர்குலைப்பவர்களை மக்கள் மட்டுமல்ல, வரலாறும் மன்னிக்காது என்பதை ஜெயலலிதா போன்றவர்கள் உணர்ந்துகொள்ளும் காலம் விரைவில் வரும்.

திருமயிலை ஆழ்வார்.

# லொறிகள் இனி நேரடியாக வன்னி சென்று திரும்பும்

யாழ்ப்பாணம்,ஏப்.26

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் நேரடியாக வன்னி சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதிக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் இதுவரை காலமும், விளக்குவைத்த குளம் பகுதியில் படையினர் மேற்கொள்ளும் சோதனைகளை அடுத்து வன்னியில் இருந்துவரும் லொறிகளில் பொருள்களை மாற்றி ஏற்றிவிட்டு வவுனியா திரும்பிவிடும்.

புதிய நடைமுறையின்படி வவுனியாவில் இருந்து புறப்படும் லொறிகள் நேரடியாக வன்னி சென்று பொருள்களை இறக்கிவிட்டு மீண்டும் வவுனியா திரும்பும். (எ)

# யாழ்.முற்றவெளி திறந்த அரங்கத்தை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்.முற்றவெளிப் பகுதியில் காணப்படும் திறந்த அரங்கத்தை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனை புனரமைப்புச்செய்ய கலாசார திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளது. அதேசமயம், அதனைப் புனரமைப்பது தொடர்பாக நிதி தேவைப்பாடுகள் தொடர்பாக யாழ்.செயலகம் திட்டமிட்டு வருகிறது.

கடந்த இரு தசாப்த காலமாக அழிவடைந்த நிலையில் உள்ள இந்த திறந்த அரங்கு துரித கதியல் புனரமைக்கப்பட்டு, பொது அமைப்புகளின் தேவைகளுக்கு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முனைபபுடன் செயற்பட்டுவருகின்றனர்.(க-6)



நாவாந்துறைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை மதுவரிப் பரிசோதகர்கள் மேற்கொண்ட கசிப்பு வேட்டையின்போது, கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள், பரல்கள் ஆகியவற்றைக் காணலாம். (க-10-180)

# பிரபாவை பாராட்டி ஆயர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

நோர்வே நாட்டின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் தாங்கள் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நடந்தபல நிகழ்வுகள் தமிழ் மக்கள் மனதில் சமாதானத்துக்கான நம்பிக்கையையும் மகிழ்வையுமே தோற்றுவித்துள்ளன.

இவ்வாறு யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் அண்மைக் கால செயற்பாடுகளைப் பாராட்டி எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக்காணும் முகமாக யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்தைக்கும் சமாதான நிலைப்பாட்டிற்கும் தாங்கள் இணங்கி, தமிழ் மக்கள் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தை தொடக்கிவைத்தமைக்காக தங்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தமிழ் மக்கள் சார்பாகத் தெரிவிக்கும் முகமாகவே இம்மடலினை எழுதுகிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நடந்து வரும் நிகழ்வுகள் தமிழ் மககள் மனதில் சமாதானத்துக்கான நம்பிக்கையை வலுப்படுத்தி வருகின்றன.

சமாதானத்தின் வழியில் - ஜனநாயகப் பாதையில் - அனைவருக்கும் பங்குகொடுத்து, அனைவரது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து நடக்க தாங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகள் துணிச்சலானவை; உண்மையான சமாதானத்துக்கான தேடலுக்கு தேவையானவை. போரையும் போராட்ட நிகழ்வுகளையும் விடுத்து, ஜனநாயகத்தையும் அதன் வழிமுறைகளையும் கடைப்பிடிக்க தாங்கள் எடுத்துவரும் முயற்சிகளைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

ஆசியாவிலேயே பெரிய பத்திரிகையாளர் மாநாடு என வர்ணிக்கப்படும், அண்மையில் நடந்த தங்களின பத்திரிகையாளர் மாநாடு தங்களை ஒரு சிறந்த அரசியல் தலைவராகவும் இனங்காட்டியுள்ளது.

பாதை திறப்பு, தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பு, பத்திரிகையாளர் மாநாடு எனத்தொடரும் நிகழ்வுகள் எல்லாம் தங்களின் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தையுமே கோடிட்டுக் காட்டுகின்றன.

தமிழ் மக்களுக்காக தாங்கள் செய்யும் அனைத்து செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும், தியாகங்களையும் வெகுவாகப் பாராட்டி வரவேற்று, தங்கள் நல்ல பணி தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம். என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)



கதிர்காமம் கிரி விகாரையில் இருந்து கடந்த 21ஆம் திகதி ஆரம்பமான சமாதான சமய யாத்திரையின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, இந்து சமய குருமார்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

பிரதமருடன் புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, நீதி, தேசிய நல்லிணக்க, புத்த சமய விவகார அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, மற்றும் இந்து சமய குருமார்களும் காணப் படுகின்றனர். (க)

## செஞ்சிலுவையின் ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.26

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை, உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு மாவட்ட ரீதியில் ஓவியப் போட்டியை நடத்தவுள்ளது.

சிறுவர்களும் சமாதானமும், எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆகிய விடயங்களை எண்ணக்கருக்களாகக் கொண்ட இந்தப் போட்டிகளில் வயதுக்கட்டுப்பாடின்றி எவரும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 'பிற்' பட்டப்படிப்பு வெளிவாரிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.26

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிற் (BIT) பட்டப்படிப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனித் தொழில்நுட்பப் பிரிவினர் நடத்தும் இவ்வெளிவாரிக் கற்கைநெறிக்கு, 2002 - 2003ஆம் கல்வியாண்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சையே நடைபெறவுள்ளது.

பகுப்பாய்வு, அளவுசார் மற்றும் தொடர்பாடல் தேர்ச்சித்திறன் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக, ஆங்கில மொழியில் பல்தேர்வு வினாக்களாக, இப்பரீட்சை அமையும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-9)

## சகலகலாவல்லி வித்தியாலயம் நாவற்குழியில்

யாழ்ப்பாணம்,ஏப்.26

மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம் எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம், நாவற்குழியில் இயங்கிவரும் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இயங்க ஆரம்பிக்கும் என வித்தியாலய அதிபர் எஸ்.ஞானலிங்கம் அறிவித்துள்ளார். (எ)

## நாளை பகல்வேளை மின் விநியோகம் தடைப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.26

மின்பிறப்பாக்கிகளில் மேற்கொள்ளப்படவுள்ள அவசர திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்குடாநாடு முழுவதும் மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபையின் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ)

## வவுனியா மாவட்டத்தில் தற்கொலை முயற்சிகள் நாளுக்குநாள் அதிகரிப்பு

வவுனியா,ஏப்.26

வவுனியா மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக தற்கொலை மரணம், தற்கொலை முயற்சிகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன என ஆய்வு ஒன்றின் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

தற்கொலைகள் தொடர்பாக ஆராய்ந்த குழு ஒன்றே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.- இந்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1988 முதல் 2001 வரையிலான காலப்பகுதியில் முறையே 58, 61, 62, 66 தற்கொலை மரணங்களும், 2000, 2001ஆம் ஆண்டுகளில் முறையே 691, 651 தற்கொலை முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் இளைஞர், யுவதிகள் என்று கூறப்படுகிறது.

1990இற்குப் பின்னர் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வசித்து வந்தவர்களே மன அழுத்தங்களுக்கு இலக்காகி இவ்வாறு தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டனர் என்றும் -

இவர்களில் பெரும்பாலானோர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசித்து வந்தவர்கள் என்றும் - தெரியவந்துள்ளது. (எ)

# 'பொப்லெப்' கல்வித் திட்டம் யாழ். மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.26

'பொப்லெப்' (BOBLEP) எனப்படும் மத்திய கல்வி அமைச்சின் இரண்டாவது பொதுக் கல்வித் திட்டம் யாழ்.மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

'பொப்லெப்' எனக் குறிப்பிடப்படும் "நூல் அடிப்படையிலான மொழி வளப்படுத்தல் திட்டம்' உலக வங்கியின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமே தற்போது யாழ்.மாவட்டத்துக்கும் கொணர்டுவரப்பட்டுள்ளது.

இதற்காகத் தற்போது வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து 12 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளின் அதிபர்கள் சம்பந்தப்பட்ட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது. உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற இப்பட்டறையை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா ஆரம்பித்து வைத்தார்.

பயிற்சிப் பட்டறைக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், கம்பர்மலை அ.த.க.பாடசாலை, வல்வை மகளிர் வித்தியாலயம், பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை, புற்றளை ம.வி., இமையாணன் அ.த.க.பா., ஞானாசிரியர் கல்லூரி, தும்பளை சைவப்பிரகாச ம.வி., தொண்டமானாறு வரகத்திப்பிள்ளை ம.வி., உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம் ஆகியனவாகும்.

இப்பயிற்சிப் பட்டறையில் மத்திய கல்வி அமைச்சில் இருந்து இரண்டாவது பொதுக்கல்விப் பணிப்பாளர் டி.பாலநாயக்க, பாடசாலை நூலக அபிவிருத்தி அலகின் பணிப்பாளர் டபிள்யூ.தர்மதாஸ, உதவிப் பணிப்பாளர் எஸ்.ஜெகசுதாகன், 'பொப்லெப்' (BOBLEP) எனப்படும் நூல் அடிப்படையிலான மொழிவளப்படுத்தல் திட்டத்தின் தேசிய அமைப்பாளர் எஸ்.எஸ்.குருப்பு, மாகாண மேற்பார்வையாளர் எ.ஆர்.மைக்கல் மற்றும் வலய மேற்பார்வையாளர் சு.இராஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-9)

## பட்மின்ரன் போட்டி

யாழ்.மத்திய கல்லூரி மக்கள் வங்கியின் வடவலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் வயதுக் கட்டுப்பாடற்றவர்களுக்கான பட்மின்ரன் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும். (எ)

# தெற்கு ஆபிரிக்க நாடுகளில் பட்டினிச் சாவு அதிகரிக்கும்!

## அவசர உதவி தேவை என்கிறது உலக உணவுத் திட்டம்

ஜெகனஸ் பேர்க்,ஏப்.26

தென்னாபிரிக்க நாடுகளில் உள்ள லட்சக்கணக்கான மக்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பதற்காக மிக



உதவிக்காக ஏங்கும் குழந்தை

அவசர உதவிகள் தேவை என்று உலக உணவுத் திட்டம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

தென் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் இந்த ஆண்டு மழை போதிய அளவில் பெய்யவில்லை என்பதால் அங்கு உணவு உற்பத்திகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த நாடுகளின் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்கள் இன்னும் சில மாதங்களுக்கே போதுமானவை என்று அங்குள்ள உதவி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் மலாவி என்ற நாடு மிக மோசமாக பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு ஏற்கனவே நூற்றுக்கணக்கானவர்கள் பட்டினியால் இறந்துவிட்டனர்.

மேலும் 3லட்சம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்கிறது உலக உணவுத் திட்டம்.

சுமார் 4 லட்சம் மலாவி மக்களுக்கு இந்த வருட இறுதிக்குள் போதிய உணவு உதவிகள் அவசரமாக வழங்கப்படவேண்டும் என்றும் அது கூறியுள்ளது. உலக நாடுகளிடம் உதவி கேட்டு மலாவி அரசு ஏற்கனவே கோரிக்கைகளை விடுத்துள்ளது. எனினும் உதவி வழங்கும் நாடுகள் இது குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்று அங்குள்ள தொண்டர் அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. (ம)

# செய்தியாளருக்கு எச்சரிக்கை!

லாகோஸ்,ஏப்.26

தீய நோக்கங்களுடன் கூடிய செய்திகளை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பிரசுரிக்கக் கூடாது என்று நைஜீரிய அரசு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீதித்துறை அமைச்சர் கானு அகாபி இந்த எச்சரிக்கையை நேற்று விடுத்தார். அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'டைம்' சஞ்சிகை நைஜீரிய அரசு அதிகாரிகள் ஒழுக்கக்கேடாக நடப்பதாகக் குற்றஞ்சாட்டி ஒரு செய்திக் கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. இதனையடுத்தே செய்தியாளர்களுக்கு மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் பங்களாதேஷில் நேற்று வாக்களிப்பு

பங்களாதேஷில் மூன்று முக்கிய நகர சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. இதனை முன்னிட்டு நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்தன. வன்முறைகள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் தலைநகர் டாக்காவில் வாகனப் போக்குவரத்துக்கள் மிகவும் குறைந்தே காணப்படுகின்றன. (ம)

# நேபாளப் பிரதமர் வீடு மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல்

காத்மண்டு,ஏப்.26

நேபாளப் பிரதமர் ஷேர் பகதூர் டியூபாவின் குடும்ப இல்லம் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல் நடத்தி அதனை முற்றாக அழித்துள்ளனர்.



தீவிரவாதிகள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தபோதும் அங்கு இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படவில்லை.

நாட்டில் மன்னராட்சி அகற்றப்பட வேண்டும் எனக் கோரி தீவிரவாதிகள் அழைப்பு விடுத்த 5 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் முதல் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்றபோது பிரதமர் தலைநகர் காத்மண்டுவில் இருந்தார்.

"தீவிரவாதிகள் குழு ஒன்று திடீரென வீட்டிற் குள் புகுந்து பாதுகாவலர்களை வெளியேறுமாறு கூறிவிட்டு முதலில் வீட்டை குண்டு வைத்துத் தகர்த்தனர். பின்னர் அதற்குத் தீமூட்டி அதனை முற்றாக அழித்தனர்" - என்று உள்ளூர் அதிகாரியான நரேந்திரா ராஜ் சர்மா தெரிவித்தார்.

தீவிரவாதிகள் இந்த வாரத்தில் வேறு சில அமைச்சர்களின் வீடுகள் மீதும் இவ்வாறான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதற்கிடையில் -

தீவிரவாதிகள் அழைப்பு விடுத்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு மக்களிடமிருந்து ஆதரவு கிடைக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# மேற்குக் கரையில் இஸ்ரேலியர் புதிய ஆக்கிரமிப்பு நடவடிக்கை

ஜெருசலேம்,ஏப்.26

மேற்குக் கரை நகரங்களான பெத்லகேம் மற்றும் ரமழாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறி சில தினங்களே ஆன நிலையில் அப்பிரதேசத்தின் பெரிய நகரமான ஹெப்ரோனை இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமித்துள்ளன.

10டாங்கிகள் மற்றும் முழு ஆயுதம் தரித்த படையினரை ஏற்றிய 10 கவச வாகனங்கள் என்பன நள்ளிரவு வேளை திடீரென நகருக்குள் நுழைந்ததைத் தாம் கண்டதாக பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியப் படையினர் நகருக்குள் புகுந்ததும் அவர்களுக்கும் பலஸ்தீன ஆயுததாரிகளுக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சண்டைகள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனப் பகுதிகளில் இதுவரை இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்படாதிருந்த ஒரே நகரம் ஹெப்ரன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹெப்பனில் நடந்த சண்டைகளில் மூன்று பலஸ்தீனப் பொலீஸார் கொல்லப்பட்டனர் என்று பலஸ்தீனத் தரப்புகள் தெரிவித்தன.

காஸா பகுதியில் நடந்த மோதல்களில் தாம் 4 பலஸ்தீன ஆயுததாரிகளைச் சுட்டுக் கொன்றுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதற்கிடையில் -

பெத்லகேமில் உள்ள நெட்டிவிற்றி ஆலயத்தில் முடக்கப்பட்டுள்ள பொதுமக்களில் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் பன்னிருவரை அங்கிருந்து வெளியேற இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

ஆலயத்தில் அடைபட்டுள்ள 200 பேரில், இவ்வளவு பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளியேற அனுமதிக்கப்படுவது இதுவே முதற்றடவையாகும். ஆலயத்துக்குள் மக்



இஸ்ரேலியர்களின் தாக்குதலில் உயிரிழந்த தன் சகா ஒருவருக்கு முத்தமிட்டு இறுதி அஞ்சலி செலுத்தும் பலஸ்தீனப் போராளி.

களுடன் சேர்ந்து பலஸ்தீன ஆயுததாரிகளும் ஒளிந்துகொண்டிருப்பதால் அங்கிருந்து எவரையும் வெளியேற இஸ்ரேல் அனுமதி மறுத்து வருகின்றது.

ஆயுததாரிகள் சரணடைந்தால் மட்டுமே ஏனையவர்கள் ஆலயத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவர் என்றும் அது கூறுகின்றது. (ம)

# பலஸ்தீனத்தைப் புனரமைக்க 10கோடி டொலர் உதவி தேவை

ஒஸ்லோ,ஏப்.26

இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளால் பலஸ்தீனப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளைப் புனரமைப்புச் செய்து அந்த மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவர உடனடியாக பத்துக்கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி தேவை.

- இவ்வாறு சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நோர்வே தெரிவித்தது.

இஸ்ரேலிய இராணுவத்தால் ஏற்பட்ட சேதங்களில் அவசரமாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய பலஸ்தீனப் பகுதிகளை நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன் எடுத்துக்கூறினார்.

அதேசமயம் புனரமைப்புச் செய்யப்படும் இடங்களை இஸ்ரேல் மீண்டும் அழிக்காது என்பதற்கு எந்தவித உறுதிமொழியும் இல்லை என்று பலஸ்தீனர்கள் தெரிவித்தனர். உதவி வழங்கும் நாடுகளின் இந்த ஒரு நாள் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆகிய 21 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பலஸ்தீனத்தின் அழிந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்த வருடத்தில் மட்டும் 17 கோடி டொலர் நிதி உதவி தேவை என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளதாக பலஸ்தீன திட்டமிடல் அமைச்சர் நபில்ஷாத் தெரிவித்தார். (ம)



பலஸ்தீன அகதிச் சிறுமி ஒருத்தி பாறை ஒன்றின் மீது இருந்து விளையாடிக்கொண்டிருக்கின்றாள். அவளின் பின்பகுதியில் தெரிவது இதுவரை அவள் குடியிருந்த ஜெனின் அகதிமுகாம் இஸ்ரேலியப் படைகளால் சிதைக்கப்பட்டுக் கிடக்கும் காட்சி.

# பலஸ்தீனத் தனிநாடுதான் இறுதித்தீர்வு!

வாஷிங்ரன்,ஏப்.26

மத்தியகிழக்குப் பிரச்சினைக்குப் பலஸ்தீனத் தனிநாடு அமைவது ஒன்றுதான் இறுதித்தீர்வாக இருக்க முடியும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள மொரோக்கோ நாட்டு மன்னர் மம் முஹம்மது அமெரிக்க அதிபரை சந்தித்துப் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

"பலஸ்தீனப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு பலஸ்தீனம், இஸ்ரேல் என்ற முழு சுயாட்சியுடன் கூடிய இரு நாடுகளை உருவாக்குவதுதான் என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது. இதைச் செயற்படுத்த நாம் விரைந்து செயற்படவேண்டி உள்ளது" - என்று புஷ் மொரோக்கோ மன்னரிடம் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள

# ஆங்ஷான் சூகியை விடுவிக்க ஐ.நா. விசேட தூதர் முயற்சி

ரங்கூன்,ஏப்.26

மியான்மரில் (பர்மா) வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்கட்சித் தலைவி ஆங் ஷான் சூகியை விடுதலை செய்விப்பதற்கு ஐ.நா. முயன்று வருகிறது.

இதற்கென ஐ.நாவின் விசேட தூதர் ஒருவர் ரங்கூன் சென்று இராணுவ ஆட்சியாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திவருகின்றார்.

மலேசியாவின் ஓய்வுபெற்ற அதிகாரியான ரஸாலி இஸ்மாயிலே இந்தப் பணிகளுக்கென ஐ.நாவால் நியமிக்கப்பட்டுள்ளார். அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் தற்போது ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சியான தேசிய ஜனநாயக முன்னணியின் உயர்மட்டத் தலைவர்களுடன் நேற்று அவர் பேச்சு நடத்தினார். "இரு தரப்புடனும் நடத்திய பேச்சுகள் நம்பிக்கை தருவதாக அமைந்திருந்தன. ஆனால அவை வெற்றிபெறும் என்று என்னால் உறுதியளிக்க முடியாது" - என்று இஸ்மாயில் தெரிவித்தார்.




1990 முதல் ஆங் ஷான சூகியை மியான்மர் அரசு வீட்டுக் காவலில் வைத்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இஸ்மாயில் அவரை அவரது வீட்டில் சென்று சந்தித்து உரையாடினார். மிக நீண்டகாலமாகவே இந்த முயற்சியில் இஸ்மாயில் ஈடுபட்டுள்ளார் எனினும் அது கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆர்ஜென்ரீனாவில் மீண்டும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

## வீதிகளில் இறங்கி மக்கள் கோஷம்!

ஆர்ஜென்ரீனாவில் மீண்டும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

அதிபர் எடுவர்டோ தலைமையிலான அரசு பொருளாதார மறுசீரமைப்பைத் திறம்படச் செய்யவில்லை என்று தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெறுகிறது.

வீடுகளில் உள்ள கோப்பைகள் கரண்டிகள் சகிதம் வீதியில் இறங்கும் மக்கள் அவற்றைத் தட்டி ஓசை எழுப்பியபடி பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் ஒரு ஸ்திர நிலைக்குக் கொண்டு வருவதற்கு உலக நாணய நிதியத்திடம் மேலும் மேலும் உதவிகளைப் பெறுவதே எமக்கு உள்ள ஒரேவழி என்று அதிபர் எடுவர்டோ தெரிவித்தார்.


பொருளாதார மறுசீரமைப்பை திறம்படச் செய்து முடிக்காததற்குப் பொறுப்பேற்று நாட்டின் நிதி அமைச்சர் ஜோர்ஜ் ரிமிஸ் லினிகோவ் தெரிவித்தார்.

அரசு உடனடி நடவடிக்கைகளை எடுத்து மக்களைத் திருப்திப்படுத்தா விட்டால் மக்களின் எழுச்சி கட்டுமீறி அதிபர் எடுவர்டோவும் பதவியில் இருந்து விலக வேண்டி ஏற்படும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (ம)

# மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக
அளப்பரிய வங்கிச் சேவையாற்றி எல்லோராலும்
"ஐயா" என அழைக்கப்படுபவராகிய
உயர்திரு. **இராசையா விஜயரட்ணம்**
அவர்கள்

வங்கியில் ஆங்கில சுருக்கெழுத்தாளராக தனது கடமையை ஆரம்பித்து யாழ்.மாவட்டத்திலும், பிறமாவட்டத்திலும் உள்ள பல கிளைகளில் கடமையாற்றி சிரேஷ்ட வங்கிச் செயலாளராக உயர்ந்து நேற்று (25.04.02) வியாழன்-முதல் ஓய்வுபெறுகின்றார். ஐயாவின் அளப்பரிய சேவையினை கௌரவித்து எமது இலங்கை வங்கி சுன்னாகக் கிளையின் முகாமையாளரும், ஊழியர்களும் வாழ்த்தி நிற்கின்றோம்.



## உயர்திரு. இராசையா விஜயரட்ணம்

25-04-1944 இல் யாழ்நகரில் பிறந்த ஐயா அவர்கள் யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவன் ஆவர். பகவான் சாயி பக்தனான ஐயா அவர்கள் தொடர்ந்தும் தேக ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்புடனும் பல்லாண்டுகாலம் வாழவேண்டி பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கை வங்கி,
சுன்னாகம்

(C/21918)

## இதய அஞ்சலி

எமது நண்பன் ஐங்கரனின் அமரத்துவம் அடைந்த அன்புத் தந்தை

### துரையப்பா பூபாலசுந்தரம்

அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

கணித புள்ளிவிபரவியல், பௌதிகவியல்துறை நண்பர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(3202)

## முழு நிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.26

'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தின் முழுநிலா கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு குருநகரில் பாங்சால் வீதியிலுள்ள அதன் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி 'அன்பின் செயற்பாடுகள்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (க-10)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.26

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு மட்டுவில் தெற்கு தேனொளி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஜ-173)


புதிய பிரிவு
A/L 2004
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Sp.)
Sat., Sun. → 9 - 10 a.m.
ஆரம் → Sat. 27-04-2002 9 a.m.
(3184)
BECON யாழ்.


## தவறிவிட்டது

செல்வநாயகம் சிறீதாஸ் என்பவரினது 200-5296 இந்த இலக்கம் உடைய முச்சக்கர வண்டியனது பதிவுப் புத்தகம் விளக்குவைத்தகுளத்தை அண்டிய பகுதியில் (24.04.2002) அன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்வரும முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**நியூ சன் ரெயிலறிங்**
பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (3196)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 02 - 10 - 1938



உதிர்வு 26 - 03 - 2002

## அமரர் இளையதம்பி ஜெயராஜசிங்கம்

(முன்னாள் ஸ்ரீகுகன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- நெல்லியடி)

*இருந்த போது நிமிர்ந்து நின்றோம் - உமை*
*இழந்தபோது கலங்கி நின்றோம்*
*இனி எப்போ காண்போம் - உங்கள் உருவை*
*இறைவனடி சேர்ந்தாலும் எங்கள் நினைவலைகளில்*
*என்றும் நிறைந்திருப்பீர்.*

*உடுப்புக்கிணற்றடி.*
*திக்கம்.*
(C/21922)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

*குறிப்பு:* நேற்று 25-04-2002 இல் பிரசுரமாகிய மேற்படி விளம்பரத்தில் படம் மாறி பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் திரு.இ.து.சிவராசா
அவர்களின் பாசமிகு மாமனார்

### கார்த்திகேசு முருகப்பா

*(இளைப்பாறிய ஆசிரியர் யா/கச்சாய் அ.த.க.பாடசாலை)*

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.*
*பளை.*

தலைவர், உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(3190)

## கண்ணீர் அஞ்சலி

நண்பனாய், மந்திரியாய், நல்லாசானாய் பண்பிலே தெய்வமாய்
எம்மையெல்லாம் அரவணைத்து வளர்த்தெடுத்த
எமது கல்லூரியின் முன்னாள் பகுதித்தலைவர்

**திரு.பொ.இராமலிங்கம்** அவர்களின்

மரணச்செய்திகேட்டு எமது கண்ணீரை அஞ்சலி ஆக்குகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது பிள்ளைகளுடன் நாமும் ஒருவராக இருந்து ஆற்றொணாத்துயரில் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி.

(3193)

# மரண அறிவித்தல்கள்

## M.சக்கரை ஆச்சாரியார்

**(ராஜ் தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர்)**

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட M.சக்கரை ஆச்சாரியார் நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முத்தாவடையம்மாவின் அன்புக் கணவரும் ராஜேஸ்வரி, சந்திரசேகரம் (சந்திரன்), ஜெயராஜா, ஞானசேகர், ரேனுகாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சௌந்தராஜன், ஜெயந்தி, கோமதி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காண்டீபன், கவிதா, சரத்பாபு, காயத்திரி, மதனிகா, பவித்திரா, விஷ்னுகாந், சிவகஜன், வைஷ்னவி, ரஜீவன், ரதீபன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*105,சிவன்கோயில் வடக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(3194)

தகவல்:
S.சந்திரசேகரம்
(சந்திரன் - மகன்)

## துரையப்பா பூபாலசுந்தரம் (பவான்)

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நல்லூர் பிரதேச சபை, யாழ். மாநகரசபை)**

மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பூபாலசுந்தரம் (பவான்) அவர்கள் நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-தங்கம்மா தம்பதிகளின் புதல்வனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் கைதா (கனடா), ஐங்கரன் (உதவி விரிவுரையாளர், இரசாயனவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கார்த்திகேசு இரவீந்திரனின் (பொறியியலாளர், கனடா) மாமனாரும் காலஞ்சென்ற நாகையா மற்றும் இராசமலர் தம்பதிகளின் மருமகனும் வைசகியின் (கனடா) அன்புப் பேரனும் Dr.திருஞானசம்பந்தர், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், புவனேந்திரன் மற்றும் பரமேஸ்வரி (அவுஸ்ரேலியா), மகேஸ்வரி (குஞ்சக்கா) ஆகியோரின் சகோதரனும் தெய்வேந்திர இராசாவின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44/8, மணல்தறை ஒழுங்கை,*
*கந்தர்மடம்.*
(3203)

தகவல்:
**பூ.ஐங்கரன்** (மகன்)

# பரதநாட்டிய அரங்கேற்றம்

கலாவித்தகர்
செல்வி ஆனந்தஜோதி சண்முகநாதன்
*(நுண்கலைமாணி, பரதநாட்டியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
அவர்களின் மாணவி

## செல்வி சுதாஜினி பொன்னம்பலம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) அவர்களின்

## பரத நாட்டிய அரங்கேற்றம்



காலம் - **27.04.2002 சனிக்கிழமை மாலை 2.30மணி**
இடம் - **யாழ். வீரசிங்கம் மண்டபம்**
தலைமை - **"கலைஞானகேசரி"**
**திரு.எம்.எஸ்.ஸ்ரீதயாளன் அவர்கள்**
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)*

பிரதம விருந்தினர் -
**"ஒப்புரவாளர்"**
**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்**
*(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

சிறப்பு விருந்தினர்கள் -
**"மஹாவித்துவான்"**
**பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்கள்**
**திருமதி தே.இராஜரட்ணம் அவர்கள்**
*(அதிபர், யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)*

### அரங்கக் கலைஞர்கள்

நட்டுவாங்கம் - **செல்வி ஆனந்தஜோதி சண்முகநாதன்**
பாட்டு - **திரு.ஸ்ரீதர்ஷனன்** B.Music
*(விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
மிருதங்கம் - **லயஞானவாரிதி திரு.எஸ்.மகேந்திரன் அவர்கள்**
*(விரிவுரையாளர், நடனத்துறை யாழ். பல்கலைக்கழகம்)*
வயலின் - **வயலின் வித்துவான் திரு.அ.ஜெயராமன் அவர்கள்**
ர்கன் - **செல்வன் சி.ரஜீவன்**

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பெற்றோர், உறவினர்,**

195)

# வடக்கே வரும் பொதுமக்களுக்கு ஓமந்தை சாவடியில் தொல்லை

## இது குறித்த விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு,ஏப்.26

ஏ-9 தரைப்பாதை ஊடாக வடபகுதிக்கு வரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தொல்லைகள் விளைவிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சுக்கு முறைபாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக விசாரணை நடத்தும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

தமிழ் - சிங்களப் புதுவருடத்தை யொட்டி குடாநாட்டுக்கு வந்த சுமார் 200 முஸ்லிம்களை ஓமந்தை சாவடியில்வைத்து திருப்பி அனுப்பப்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஓமந்தையில் பயணிகளுக்கு ஏறபடும் சிரமங்களை எவ்வாறு தவிர்ப்பது என்பது குறித்தும் -

குறைபாடுகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக அதிகாரிகள் குழு ஒன்றை ஓமந்தைக்கு அனுப்புவது குறித்தும் -

ஆராயப்படுவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே ஓமநதை விளக்கு வைத்தகுளம் சோதனைச் சாவடியூடாக பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் வடபகுதிக்குச் செல்வதற்காக வந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வவுனியா நகரில் தங்கநேரிட்டுள்ளதாகவும் -

அங்கு அவர்கள் தங்குமிடம் தேடியலைய வேண்டியிருப்பதாகவும் -

வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

## தீவகம் முழுவதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கைக் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள தீவுகளைச் சுற்றி முன்னரங்க நிலைகளை நிறுவியுள்ளனர். ஊடுருவல்களைத் தடுப்பதற்காகவும், பாதுகாப்புக்காகவும் (உதாரணமாக) ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்டைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றைச் சூழ இத்தகைய முன்னணி அரண்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதிகளில் கண்காணிப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே இத்தகைய அனைத்துத் தீவுகளுமே இராணுவப் பிரதேசமாகவே கருதப்படுகின்றன.

ஆகையினால் இப்பிரதேசங்களுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1.13 பிரிவின் கீழ் (அரசியல் பணியாற்றுவதற்காக) புலிகள் வருகை தருவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எனினும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 1.11 (தமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும நண்பர்களைச் சந்திப்பது), பிரிவு 1.12 (தமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களின் திருமணம், மரணச் சடங்கு போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றுவது) ஆகியவற்றின் கீழ் தீவகத்துக்குள் வருவதற்கு அத்தகைய நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைய கடற்படையின் அனுமதிப்பர்.

எனினும் புலிகள் உறுப்பினர்கள் வீடியோ கமராக்கள், புகைப்படக் கமராக்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், சயனைட் வில்லைகள் ஆகியவற்றை எடுத்துவர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தொலைத் தொடர்புக் கருவிகள் 'ரிமோட் கொண்ட்ரோல்' உபகரணங்களைப் பயன்படுத்தக் கூடியவை.

சயனைட் வில்லைகள் உயிர்ச்சேதம் ஏற்படுத்தக் கூடிய ஓர் ஆயுதமாகக் கருதக்கூடியவை.

கடற்படைப் பிராந்தியத்துக்குள் கமரா அனுமதிக்கப்படாததற்கான காரணம் வெளிப்படையானது.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்தியக் கடற்படைத் தளபதி தீவகப் பிரதேசம் என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீவுகளில் நெடுந்தீவு அடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

# படையினர் வெளியேற வலியுறுத்து!

யாழ்ப்பாணம்,ஏப்.26

அரசு - புலிகள் இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த இரு தினங்களுக்கு முன்பு கிளிநொச்சியில் நடைபெற்றபோது இது குறித்து வலியுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் இருந்து தொடர்ந்தும் படையினர் வெளியேறாது இருந்தால் 195, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் ஆலய நிர்வாகத்தினர், பாடசாலை அதிபர் மற்றும் பொது அமைப்பினர் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து கரிகாலன் பற்றி பல்வேறு வதந்திகளை தென்பகுதி ஊடகங்கள் வெளியிட்டு வந்தன.

அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் பதவிநீக்கம் செய்யப்பட்டு புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பணிப்பின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

நேற்று அதிகாலை மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்துக்கு இயந்திரப் படகு மூலம் வருகை தந்த கரிகாலன் கொக்கட்டிச் சோலையில் உள்ள புலிகளின் மாவட்ட அரசியல் பணிமனையில் பணிகளை ஆரம்பித்தார்.

இதேவேளை புலிகளின் இயந்திரப் படகு மூலம் கரிகாலன் மட்டக்களப்புக்கு பயணம் செய்துகொண்டிருக்கையில் புலிகளின் படகை வழிமறித்த கடற்படையினர் பல மணிநேரம் படகை நடுக்கடலில் தடுத்து வைத்ததாகத் தெரியவருகிறது. (ஐ)

## முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம்பெற்ற படை அதிகாரிகளின் மாநாட்டில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களிலும் முகமாலை ஊடான போக்குவரத்தை அனுமதிக்குமாறு நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச கண்காணிப்புக்குழுவின் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதேபோன்ற கோரிக்கையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும் விடுத்திருந்ததாகத் தெரிகிறது. இதனை அடுத்தே இன்றும் நாளையும் முகமாலை சோதனைச் சாவடியைத் திறக்க யாழ். படைத் தலைமை அனுமதி வழங்கியதாக அறியவந்தது.

போயா விடுமுறை தினமான இன்று முகமாலை ஊடாக போக்குவரத்து இடம்பெறமாட்டாது என்று யாழ். படைத் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதேசமயம் இந்த நடைமுறை தொடரக்கூடும் என்றும் -

காலை 8மணிமுதல் பிற்பகல் 5மணிவரை பயணிகள் வாகனங்களுடன் கனரக வாகனங்களும் அனுமதிக்கப்படும் என்றும் -

எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-8)

## புலிப்பிரமுகர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பணிகளை மேலும் விரிவுபடுத்துவதற்காகவிடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பணிக்குழுவினரில் 30 பேர் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகிறது. இவர்கள் நேற்று அல்லது இன்று யாழ்ப்பாணம் வருவார்கள் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. (ஒ)

## தொழிற்சங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல்.

★ யுத்தத்தின் காரணமாக மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோருதல் -

இதேவேளை -

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம் கேட்போர் கூடத்திலும் மேதினம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொள்ளாத தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளை இன்றைய கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர் சங்கங்கள், கிராமிய உழைப்பாளர் சங்கம், பாரவூர்திச் சங்கம், முச்சக்கர வண்டிச் சங்கம், சிற்றூர்திச் சங்கங்கள் மற்றும் பிற சங்கங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## சிங்கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் தடைசெய்திருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்த செய்தியை விடுதலைப் புலிகளின் வவுனியா அலுவலக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

இதேவேளை -

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகப் பெயர்ப்பலகையில் "இலங்கை திறந்த பல்கலைக் கழகம்" என்ற பதமும் இலச்சினையும் 'ஸ்ரீலங்கா' என்ற பதமும் அழிக்கப்பட்டமை தொடர்பாக வளாக நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு வினவியபோது -

இதனை மாணவர் தரப்பே செய்துள்ளனர் என்றும் - இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மாணவர் தரப்பிடம் இது குறித்துக் கேட்டபோது திறந்த பல்கலைக் கழகமும் வவுனியா வளாகமும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருப்பதை தாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்தனர். (ஐ)

## நிவாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் அதற்கேற்ப குறைக்கப்படும் எனவும் -

தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை நிவாரண அரிசி ஒரு கிலோ 29 ரூபா 50 சதம் என்ற பணப் பெறுமதிக்கே வழங்கப்பட்டது. தற்போது அதன் பணப்பெறுமதி 38 ரூபா 50சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி புனர்வாழ்வு அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களில் சுமார் 65 வீதமான பங்கு அரிசியே ஆகும். கொழும்பில் இருந்து அரிசி வந்து சேராததால் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணத்துடன் அரிசி வழங்கப்படவில்லை. ஏனைய பொருள்கள் மட்டுமே வழங்கப்பட்டன.

இதேவேளை -

நிவாரண அரிசியின் விலை அதிகரிப்பினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். (ஐ)


பொருளியற் கல்லூரி
காவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2004
புதிய பிரிவு
பொருளியல்
S. வரதராஜன் B.A (Hons)
ஆரம்பம்
27 - 04 - 02 சனி
10.00 (மு.ப)

தேவை
எமது ஸ்தாபனத்திற்கு அனுபவம் உள்ள Sweet Maker தேவை.
லிங்கன் கிறீம் ஹவுஸ்,
119, கஸ்தூரியார் வீதி,
(3192) யாழ்ப்பாணம்.

திருமறைக் கலாமன்றம்
இணைக்கும்
கலைப்பாலம் ~ 2002
ஏப்ரல் 18 - 28 வரை
கொழும்பு - யாழ்ப்பாணம்
தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள்
கலையாத்திரையாக வலம் வருகின்றார்கள்.
யாழ்ப்பாணத்தில்
27-04-2002 சனிக்கிழமை (நாளை) மாலை 6.45 மணி
இடம் - மன்ற அரங்கு
28-04-2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி
இடம் - புனித அன்னாள் ஆலய முன்றில் இளவாலை
பல்வேறு கலை நிகழ்வுகளுடன்
சிறப்பு நிகழ்ச்சியாக
மூவினக் கலைஞர்கள் பங்குகொள்ளும்
தரிசனம்
வார்த்தைகளற்ற நாடகம் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம்: இலவசம்
- திருமறைக் கலாமன்றம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 021-2393
Website: www.cpateam.org.
(C/21905)

எமது பிரமிட்
வீடியோ CD வெளியீடு
தமிழ்
வீடியோ விமல்
(C/21924) யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது
மணயர்பதி வீதி, கொக்குவில்/மே, கொக்குவில் என்று விலாசமிடப்பட்ட தே. அ. அ. (இல.703583890V) 24.04.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
சு.முருகானந்தசர்மா
65, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3204)

பொருளியல்
2004 A/L
R. இராஜேஸ்வரன்
(கலைப்பிரிவு மாணவர்களுக்கு)
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
சனி, ஞாயிறு - 12 மணி
DMI யாழ்ப்பாணம்.
(C/21916)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
முழுநிலா நாள் கருத்தரங்கு
ஒத்திவைப்பு
மாதாந்தம் நடைபெறும் முழுநிலா நாள் கருத்தரங்குத் தொடரின் இம்மாத நிகழ்வு வழமையின்படி இன்று நடைபெற வேண்டும். ஆனால் தவிர்க்கமுடியாத காரணங்களால் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம். (C/21927) பழைய மாணவர் சங்கம்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தவனம் கணேசு

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - க/நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி)

நயினாதீவினைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி, கட்டைப்பிராயினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் கணேசு நேற்று (25.04.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய். (3207)

தகவல்:
ஸ்ரீரஞ்சன் (மகன்)

### நடராஜா அன்னலஷ்சுமி

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இல.8, செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா அன்னலஷ்சுமி நேற்று (25.04.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் நவரட்னம், கனகலிங்கம், பாக்கியலஷ்சுமி (பல்கலைக்கழகம்), செல்வராணி (பல்கலைக்கழகம்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1, B.A.தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (C/21926)

தகவல்:
லயன் B.R. ரஞ்சன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.